விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | சித்திரை: 22 | ஷவ்வால் பிறை: 9 | இதழ்: 82
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 5-05-1990

### வாகனப் போக்குவரத்துக்கு
## இடையூறாக இருப்போருக்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாநகரப் பகுதிகளில் அதிகரித்துவரும் வாகனப் போக்குவரத்தை ஒழுங்கு செய்வதில் நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் சில கராஜ் மற்றும் மரக்காலை உரிமையாளர்களும், பொது மக்கள் சிலரும் இடையூறாக இருக்கிறார்கள் என்பதை மன வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் வெளியிட்டுள்ள

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மத்திய கல்லூரியில் இன்று ஓவியக்கண்காட்சி

(யாழ்ப்பாணம்)
இன்று 5-ம் தேதி சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் யாழ். மாவட்டவிடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின

(8ம் பக்கம் பார்க்க)

## ★ இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து

# ஜப்பான் கவலை; உண்மை நிலை அறிந்து கொள்வதில் ஆர்வம்!

## அதிகளவு உதவி ஜப்பானிடமிருந்து கிடைக்கவில்லை

(லண்டன்)
ஜப்பானியப் பிரதமர் திரு. டொஷிகி கைபூவும், ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவும் நேற்று நடாத்திய உத்தியோகபூர்வ பேச்சு வார்த்தையில், இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து அனைத்துலக கவனமும் ஈர்க்கப்பட்டது ஜப்பானுக்கும் கவலை தருவதாக உள்ளதென்றும், உண்மை நிலையை அறிந்துகொள்ள ஆர்வத்துடன் இருப்பதாகவும் திரு. கைபூ தெரிவித்ததாக ஜப்பான் பிரதமரின் சார்பில் தகவல் தரவல்ல அதிகாரி திரு. எஸ். டகினோடோ தெரிவித்திருக்கிறார்.

இதற்கு ஜனாதிபதி திரு. பிரேமதாசாபதிலளிக்கையில், தான் பதவியேற்றவுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கையைப் பற்றி எடுத்து விளக்கினார். அனைத்துலக பத்திரிகைகளில் இலங்கை குறித்து தவறான தகவல்கள் வெளியானதாகவும் கூறினார்.

அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் அனுமதிக்கப்பட்டதையும் அவர் சுட்டிக் காட்டினார்

ஜப்பானிய உதவித்திட்டத்துக்கும் இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கும் தொடர்பு ஏதுமில்லையென்று திரு. டகினுகா எடுத்து விளக்கினார்.

கடந்த 34 ஆண்டு காலத்தில் ஜப்பானிய பிரதமர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்தது இதுவே முதல்தடவை, ஜப்பானிய உதவித்தொகை அதிகரிப்பு குறித்து அறி

(8 ம்பக்கம் பார்க்க)

## 250கிலோ வெடிமருந்துகள் கண்டுபிடிப்பு

(சென்னை)
தமிழ்நாடு இராமநாதபுரம் உச்சிப்புளிக்கு அருகே 250 கிலோ கிராம் வெடிமருந்துகளை காவல்துறையினர் நேற்று கைப்பற்றினர்.

இந்த வெடிமருந்துகள் பிளாஸ்டிக் பைகளுக்குள் சீல் செய்யப்பட்டு கான்களில் வைத்து கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பகுதியில் சில மாதங்களுக்கு முன் ஆயுதங்களும், வெடி மருந்துகளும் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே.

### யாழ். மாநகர சபைக்கு
## சோலைவரி ஒரு கோடி ரூபா நிலுவையாக உள்ளது

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கடந்தநான்கு மாதங்களில் சோலை வரிப் பணமாக 25 லட்சத்து 47,000 ரூபாவை பொதுமக்களிடமிருந்து அறவிட்டுள்ளது என்று யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: ஒரு வருடத்துக்கு யாழ். மாநகராட்சி மன்றத்துக்கு சராசரி சோலைவரி வருமானம் 35 லட்சம் ரூபா ஆகும். கடந்த சில வருடங்களாக பிரச்சனை காரணமாக மக்கள் சோலை வரிப் பணங்களை ஒழுங்காகக் கட்டாதகாரணத்தால் சோலை வரி நிலுவைப் பணமாக 1 கோடி ரூபா இருக்கிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

## தட்சரின் கட்சி படுதோல்வி

(லண்டன்)
பிரிட்டனில் நேற்று முன் தினம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளின் தேர்தலில் பிரதமர் மார்கிறட் தட்சரின் கன்சர்வேற்றிவ் கட்சி படுதோல்வி அடைந்துள்ளது.

எனினும் அபிப்பிராய வாக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்ட ஸ்தானங்களிலும் குறைவான இடங்களையே தொழிற்கட்சி வென்றுள்ளது என்பதை இதுவரை வெளிவந்த தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன.

[அ]

### 55 வயதுக்கு மேல்
## அரச ஊழியர் பதவி நீடிப்பு விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(பருத்தித்துறை)
அரசாங்க சேவையில் இதுவரை சேவை நீடிப்பு கோரி 55வயதிற்கு மேற்பட்ட பல அரச ஊழியர்கள் விண்ணப்பித்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது

அரசாங்கம் இளைஞர்களுக்கு அரசதுறையில் கூடுதல் தொழில்வாய்ப்புக்களை வழங்கி இளைஞர்களின் வாழ்க்கை வழப்படுத்தவும், நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்தவும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்திவருகின்றது.

இதன் ஒரு நடவடிக்கையாக இனிமேல் 55 வயதிற்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு சேவைநீடிப்புக்கோரி சிபார்சுசெய்வதைத் தவிர்க்கும்படி அரசாங்கம் சகல அரசாங்க திணைக்களங்களின் தலை

(8-ம் பக்கம் பார்க்க)

### ‘சேவை தொடர்பான
## ஆங்கில படிவத்தை நிரப்பி அனுப்பவேண்டாம்”
### ஆசிரியர்களுக்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
ஆசிரியர்கள் மாகாண சேவையிலா அல்லது மத்திய அரச சேவையிலா சேவையாற்ற விரும்புகிறார்கள் எனக் கோரும் விண்ணப்பப் படிவம் ஆங்கிலத்தில் அனுப்பப்பட்டமையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

அப்படிவங்களை நிரப்பி அனுப்ப வேண்டாமெனவும், தமிழில் படிவத்தைத் தருமாறு கோருமாறும் ஆசிரியர்களை

(8- பக்கம் பார்க்க)

### வன்செயலில்
## உயிரிழந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கு மாதாந்த வேதனம் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் வன்செயல் காரணமாக இறந்த அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களின் குடும்பத்தினருக்கு, இறந்த அதிபர், ஆசிரியர்களின் மாதாந்த வேதனத்தை வழங்க உடன் நடவடிக்கை எடுத்துள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தம்மிடம் தெரிவித்துள்ளதாகஇலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி வன்செயல்

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

3" 4" கொங்கிறீட் கற்கள் விற்பனைக்குண்டு. S. சாமி நாதர், இல. 20 மாட்டீன் றோட், யாழ்ப்பாணம், (சி–3825)

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை நாசிக் சிகப்பு ரகம். வியாபாரிகளுக்கு விசேட சலுகை வழங்கப்படும். கிலோ 375-00 படி கிடைக்கும். பிள்ளையார், 259, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (சி–3797)

அல்சேசன் குட்டிகள் பூச்சி அகற்றப்பட்டுள்ளது. வயது ஏழு கிழமை:– டொபமான் பின்சர்X றிட்ச்பக் ஆண்குட்டி (6) ஆறு மாதம், பன்ரம் இரண்டரை மாதக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:– 249, பலாலி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (சி–3822)

### சேவை

R O[illegible]C[illegible]K (Underground Water [illegible] Prospector) At first contact through a letter by giving your water problems. Point Pedro Road, Kopay. (சி-3805)

### தேவை

மட்டுவில் திருக்கணித அச்சகத்தில் கொம்போசிங் வேலைக்கு (அச்சுக்கோர்த்தல்) அனுபவம் வாய்ந்தவர்கள் உடன் தேவை. சாவகச்சேரிப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. திருக்கணித அச்சகம், மட்டுவில். [சி-3823]

### மணமகள் தேவை

யாழ்ப்பாணம் உயர்குல சைவவேளாள 31 வயது ஜி. சி. ஈ. (உயர்தரம்) சித்தியெய்தி பிரான்சில் குடி உரிமையுடன் கம்பனி முகாமையாளராகப் பதவி வகிப்பவருக்கு உயர்குடியில் பிறந்த அழகு, கல்வி, சீதனமுள்ள பெண் விவாகம் முடித்துப் பிரான்சுக்குப் போகச் சம்மதமுள்ளவர்களிடமிருந்து உடன் விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. C 3830, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். சி–3830))

### பயணிகள் புகார்

(நாவற்குழி)

சாவகச்சேரி பருத்தித்துறை வீதியில் உள்ள பளகழி மதகு இதுவரை திருத்தப்படாததால், சாவகச்சேரியிலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் வாகனங்கள் யாவும் கொடிகாமம் சென்று அல்லது புத்தூர் சென்று பயணத்தைத் தொடர வேண்டியுள்ளது.

இதனால் எரிபொருள் கூடுதலாக தேவைப்படுவதுடன் நேரத்தையும் அதிகம் செலவு செய்ய வேண்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (107)

# "தமிழருக்கு இலங்கை அரசு அதிகாரப் பகிர்வு வழங்கும்"

## பாரதப் பிரதமர் நம்பிக்கை

(விசாகபட்டினம்)

இலங்கைத் தமிழ்மக்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பதற்கான தனது வாக்குறுதியை இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்றும் என்று இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

விசாகபட்டினத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கைத் தமிழர்களுக்கான அதிகாரப்பகிர்வுகுறித்து இலங்கை அரசின் பிரதிநிதிகளுடன் தான் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அவர் கூறினார். (து)

# இலங்கையில் மனிதஉரிமை மீறல்குறித்து ஜப்பான் பிரதமர் கவலை

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பது சம்பந்தமான குற்றச்சாட்டுக்கள் குறித்து ஜப்பான் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

இந்த நிலைமையை சீராக்க இலங்கை அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் ஜப்பானிய பிரதம மந்திரி டொஷிகி கைபூ கேட்டுள்ளார்.

இதே வேளை இலங்கைக்கான எந்த ஒரு உதவியையும் மனித உரிமைமீறல் பிரச்சனையுடன் இணைக்கக்கூடாதுஎன்று கொழும்பில் ஜப்பானியப் பிரதமருடன் ஜனதிபதி ஆர். பிரேமதாசா நடத்திய சந்திப்பின்போது கேட்டுக்கொண்டார். (து)

## நாளை திறப்புவிழா

(மட்டுவில்)

சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலையின் நோயாளர் நலன் புரிச் சங்கத்திறகாக அமைக்கப்பட்ட புதிய பணிமனையை பிரதேசத் தொற்று நோய்த் தடுப்புத்துறை வைத்திய அதிகாரி, வைத்தியக் கலாநிதி தா. சிவபாதம் நாளை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைப்பார்.

வைத்தியசாலை வளவினுள் அமைந்துள்ள இப்பணிமனையின் திறப்புவிழா சாவகச்சேரி நகரசபையின் விசேட ஆணையாளர் திரு த. நவரத்தினராஜா தலைமையில் நடைபெறும். மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி என். அருள்லிங்கம், பல்வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி வி. ஆர். டேவிட் ஆகியோர் மங்கல விளக்கை ஏற்றி வைப்பார்கள்.

தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை, தமிழீழ வி பு. ம. மு. தென்மராட்சிப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. கே. பாப்பா, நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ப. தினேஷ் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்புரைகள் வழங்குவர். (82)

## ஊழியர் புள்ளிவிபரம் திரட்டப்படுகிறது

(நாவற்குழி)

மே மாதம் 2-ம் திகதியில் உள்ளபடி சகல அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களினது விபரங்கள் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் சேகரிக்கப் படுகின்றன.

இதில் அரசாங்க சேவை கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட முறையான சபைகள், அரசுக்கு சொந்தமான ஸ்தாபனங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் தரவுகள் சேர்த்துக் கொள்ளப்படும். (107)

## தமிழறிஞர் சொக்கனுக்கு மணிவிழா

[யாழ்ப்பாணம்]

தமிழறிஞர் சொக்கன் அவர்களுக்கு அடுத்தமாதம் இரண்டாம் திகதி மணிவிழா நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அவரது மணிவிழாவினை, அவரது கிராம மக்கள், அன்பர்கள்' நண்பர்கள் ஆகியோர் இணைந்த மணிவிழாச்சபை ஒழுங்குசெய்து வருகின்றது.

மறுமலர்சிக்காலம் முதல் தொடர்ச்சியாகபலதரப்பட்ட தமிழிலக்கிய ஆக்கங்களிலும் தமது தனித்துவமான முத்திரையினைப் பதித்துக் கொண்ட சொக்கன், தனது ஆக்கங்களால் பல பரிசில்களைப் பெற்றும் பெருமை கொண்டவராவார்.

மணிவிழாச் சபைத் தலைவர் திரு. தி கமலநாதன் இதுபற்றித் தெரிவிக்கையில் எதிர்வரும் ஜூன் மாதம் 2-ம் திகதி திரு. சொக்கன் அவர்களுக்கு நாயன்மார்கட்டில் மணிவிழா நடைபெறவுள்ளது என்றும் அவரது மணிவிழாமுயற்சியின் போது எமக்குக் கிடைக்கின்ற ஆதரவு நல்லாசியும் சொக்கன் மீது தமிழ்கூறு நல்லுலகம் கொண்டுள்ள அபிமானத்தை

(7-ம் பக்கம் பார்க்க)

## "அமைய அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரமாக்குக!"

(மானிப்பாய்)

யாழ் அரச அதிபரின் பரிபாலனத்திற்குட்பட்ட அலுவலகங்களில் அமைய அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களை உடன் நிரந்தரமாக்குமாறு கோரி அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளைத் தலைவர் திரு. சி. ஆறுமுகம் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநருக்கும், யாழ். அரச அதிபருக்கும் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளார்.

இம் மகஜரில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது, "யாழ். மாவட்ட அரச அதிபரின் பரிபாலனத்திக்குட்பட்ட அரச செயலகத்திலும், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அமைய அடிப்படையில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களை நிரந்தரமாக்குமாறு எங்கள் தொழிற்சங்கமும், யாழ். மாவட்ட அரச அதிபரும் உள்நாட்டலுவல்கள் பொது நிர்வாக அமைச்சைக் கோரியும் இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை.

"உள்நாட்டலுவல்கள் அமைச்சு அரச அதிபருக்குட்பட்ட அலுவலகங்களில் காலி இடங்கள் இல்லை என்றுதட்டிக் கழித்தது. இவ்வேளையில் யாழ் அரசு அதிபரின் பரிபாலனத்தின் கீழ் பல்வேறு உயர் அதிகாரிகளின் எண்ணிக்கையும் புதிய திணைக்கள அலுவலகங்களும் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஆனல் அலுவலக சிற்றூழியர்கள் மட்டும் 15 ஆண்டுக்கு மேலாக அதிகரிக்கப்படவிலலை. ஆனலும் நிருவாக சுற்று நிருப இல 41/88ன் பிரகாரம் தொடர்ந்து6மோதங்கள் அமைய அடிப்படையில் பணிபுரியும் சகல ஊழியர்களையும் நிரந்தரமாக்குமாறு ஜனதிபதி பணித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (71)

## புலோலியில் கொள்ளைச் சம்பவங்கள்

(பருத்தித்துறை

புலோலிப் பகுதியில் அதிகரித்துவரும் திருட்டு சம்பவங்களினுல் புலோலிப் பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

அன்மையில் புலோலியில் புலோலி ப. நோ. கூ. சங்க மந்திகை மக்கள் கடை கொள்ளை, மந்திகை அம்பாள் ஆலய கொள்ளை, கால் நடை வைத்தியஅதிகாரியான பெண்ணின் தங்கச்சங்கிலி கொள்ளை என்பன இடம்பெற்றுள்ளன. தொடர்ந்துவரும் இக் கொள்ளைகளினுல் இப்பகுதி மக்கள் பெரும் கவலைகொண்டுள்ளனர்.

இக்கொள்ளைக் கோஷ்டியினரைக் கண்டுபிடித்து கொள்ளைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்மெென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (52)


## லிகிதர் தேவை

யாழ். வர்த்தக சங்கம், யாழ்ப்பாணம்.

மேற்படி சங்கத்திற்கு ஒரு லிகிதர் வேண்டும். கல்வித் திறமை, முன் அனுபவம் முதலியவற்றுடன் 15-5-90ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும் கீழ்க் காணும் முகவரிக்கு:

கௌரவ செயலாளர்
யாழ். வர்த்தக சங்கம்,
இல. 282 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-3827)

## 7வது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் கவாஸ்கர்

திரு. ஸ்ரீபன் சார்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கவாஸ்கர் தனது 7வது பிறந்ததினத்தை (இன்று) சனிக்கிழமை குதூகலமாக கொண்டாடுகிறுர். இவரை அம்மா, கிரான் மம்மி, அன்ரிமார் அக்காமார், கனடா கிங்ஸ்லி அங்கிள், அன்ரி கவிதா மச்சாள், ஜேர்மனி லெஸ்லி அண்ணு, அடம்பன் அப்பம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், மன்ஞர் தொட்டப்பா, தொட்டம்மா ஆகியோர் நல் வாழ்வு பெற்று வாழ வாழ்த்துகிறுர்கள் சி–3824)

# காஷ்மீர் விவகாரம்: பாக். அழைப்பை இந்தியா நிராகரித்தது!

(புதுடில்லி)

**காஷ்மீர் பிரச்சனை தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தவரும்படி பாகிஸ்தான் விடுத்துள்ள அழைப்பை இந்தியா நேற்று நிராகரித்து விட்டது.**

ஏற்கனவே இந்தியாவினுல் நிராகரிக்கப்பட்ட விடயங்களைப் பாகிஸ்தான் அரசு மீண்டும் கொண்டுவந்திருப்பதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் லோக்சபாவில் உரையாற்றும் போது நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க இந்தியா எப்பொழுதும் தயாராக இருக்கிறது என்றும் ஆனுல் பாகிஸ்தான் பிரதமர் கடந்த புதன்கிழமை தெரிவித்த கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கூறினுர்.

இதேவேளை விசாகப்பட்டினத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் பாகிஸ்தானின் எந்த அச்சுறுத்தலையும் இந்தியா முறியடிக்கும் என்றும் தனது பாதுகாப்பு எல்லைகளைப் பாதுகாக்கும்வலுவான நிலையில் இந்தியா இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் உட்பட அயல் நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக் கொள்ள இந்தியா விரும்புவதாகவும் அவர் கூறினுர். (து)

## "சமூக முன்னேற்றத்திற்கு இளைஞர்கள் உழைக்க வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

இன்றைய காலகட்டத்திலும் இளைஞர்கள் சமூகசேவைகளிலும் பொருளாதார அபிவிருத்தியிலும் பங்குகொண்டு, சமூக முன்னேற்றத்திற்கு உழைக்க வேண்டும் என்று கோண்டாவில் ஞபனவீரசங்க சனசமூக நிலையத்தின் 45-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றிய திரு. க. ம. இராசேந்திரன் தெரிவித்தார்.

45வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கலை, கலாசார விளையாட்டுப் போட்டிகளும்,

(5-ம் பக்கம் பார்க்க)

## நேபாளத்தில் புதிய அரசியல் யாப்பு

[காட்மே்]

நேபாளத்தில் அடுத்த மூன்று மாதகாலத்தினுள் புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டுவிடும் என்று நேபாள பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய அரசியல் யாப்பின் மூலம் மன்னர் பிரேந்திரா அரசியல் சாசனத்திற்குட்பட்ட மன்னராகத் திகழ்வார் என்றும் அவர் கூறினுர். (து)

## வீதி திருத்த நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஓராங்கட்டை தம்பசிட்டி வீதியைத் திருத்தி புனரமைப்பதற்கான நடவடிக்கைகளைப் பருத்தித்துறை நகரசபை மேற்கொண்டுள்ளது.

சுமார் எட்டு லட்சம் ரூபா இவ்வீதி புனரமைப்புக்கு செலவிடப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

# அணுஆயுத நவீனப்படுத்தலை அமெரிக்கா கைவிட்டுள்ளது!

(வாஷிங்டன்)

நேட்டோவின், குறுகிய தூரம் செல்லும் அணு ஆயுதங்களை நவீனமயப்படுத்தும் திட்டங்களை அமெரிக்கா கைவிட்டுள்ளது என்று ஜனுதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

இதன்படி ஐரோப்பாவிற்கு நவீன ஆயுதங்களை அமெரிக்கா அனுப்பமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

நேட்டோ ஸ்தாபனத்தின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி ஆராய ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் உச்சி மாநாடுகூட்டப்பட்ட வேண்டுமென்றும் அவர் கருத்துவெளியிட்டுள்ளார். (து)

## இராசி பலன்

05-05-1990

சனிக்கிழமை

மேடம்; அற்பத்தனம், தத்துவம் பேசுதல், சமய உணர்வு, பகை.

இடபம்: கறுப்புத்தொழில், பணமுடை, பொருள் வரவு, சோம்பல்.

மிதுனம்: சந்தோஷம், பண வரவு, போசன சுகம், இனஜனவழி.

கடகம்: கஞ்சத்தனம், செலவு, சகோதர உதவி, எதிர்ப்பு.

சிங்கம்: இடமாற்றம், சமயப் போக்கு, புதியவர் சேர்க்கை, செலவு.

கன்னி: வைராக்கியம், தனலாபம், இனசன விரோதம், யோசனை.

துலாம்; பொருள் வரவு, கற்பனை, நீசர் நேசம், அவதியுறல்.

விருச்சிகம்: தொழில் வெற்றி சமாதானம், நீசர் நட்பு, செலவு.

தனுசு: சோம்பல், பிடிவாதம், ஆலயச் செலவு, குடும்பக் கலகம்.

மகரம்: உறவினர் வருகை, நிதானப்போக்கு, புதிய சிந்தனை கடன் படல்.

கும்பம்: சோம்போறித்தனம் கடன் தொல்லை. தடை, செலவு.

மீனம்: பொருள் வரவு. ஆலய தரிசனம், குடும்ப சுப காரியச் சிந்தை.

இ. மகாதேவா

# பிரான்ஸில் இனவேற்றுமை: எதிராக கடும் நடவடிக்கை!

(பாரிஸ்)

பிரான்ஸில் இனவேற்றுமை பாராட்டுவோருக்கும், இனத்துவேஷத்தைத் தூண்டுவோருக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கான சட்டமூலம் ஒன்று பிரான்ஸ் நாடாளுமன்லத்தில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

நிறவேற்றுமைக் குற்றம் புரிந்தால் தண்டனைத்தொகையும் சிறைத்தண்டனையும்விதிக்கப்படுவதுடன் ஐந்தாண்டு சிவில் உரிமைகள் பறிப்பதற்கும் இத்தச்சட்ட மூலம் வகை செய்கிறது.

தேர்தலில் போட்டியிடும் உரிமைகள் உட்பட பல உரிமைகளைப் பறிப்பதற்கும் இது வகை செய்கிறது.

பிரான்ஸில் இனவெறித் தாக்குதல்கள் அதிகரித்துள்ள இந்நேரத்தில் இந்தச் சட்டம் முன் மொழிவுவந்திருக்கிறது. (து)

## பாரியின் சாதனைகள் தொகுப்பு!

[மாஸ்கோ]

உலகில்நிகழும் பல்வேறு அதிசய நிகழ்ச்சிகள், முதன் முதலாக நிகழும் இணையற்ற சாதனைகள் ஆகியவைகளை தொகுத்தளிக்க சோவியத் யூனியனைச் சேர்ந்த 'பாரி' என்ற அமைப்பு முன்வந்துள்ளது.

'பாரியின் சாதனைகள் தொகுப்பு' எனற பெயரில் இந்த அமைப்பு புத்தகம் ஒன்றினை வெளியிடவுள்ளது.

உலகில் மிக உயரமான மனிதரும், உயரம் குறைந்த மனிதரும், பலம் வாய்ந்தமனிதரும் சோவியத் யூனியனில் தான் வாழ்கின்றனர். 240 சென்ரிமீட்டர் உயரமான விக்டர் சிகவென்கோ ஒரு காலத்தில் கூடைப்பந்து விளையாட்டு வீரராக இருந்தார் என்று தெரிவித்துள்ள இந்த அமைப்பு 'உலக அதிசயங்களின் களஞ்சியம்' ஒன்றையும் வெளியிட தீர்மானித்துள்ளது.

38 மொழிகளில் பேசும் திறமை பெற்ற யூரி சலோம்கினைப் பற்றியும் 17 மொழிகளில் ஹாஸ்யமாகப் பேசக்கூடிய வஸ்தூன்ஸ்கி சகோதரர்களைப் பற்றியும் செய்திகள் இதில் இடம்பெறும்.

கண்களை மூடிக்கொண்டு முகர்ந்து பார்ப்பதன் மூலம் நாளிதழ்களை, 'துருத்' பத்திரிகையா அல்லது 'இஸ்வெஸ்தியா' பத்திரிகையா என்று வேறுபடுத்திக் கூறும் திறமை வாய்ந்த பத்து வயதுப் பையன் சிரியோஷசெமிவோலஸ் பற்றிய செய்தியும் இப்புத்தகத்தில் வெளியிடப்படும். (து)

# வெங்காயச் செய்கையாளர் 45 பேருக்கு ரூ. 5 லட்சம் கடனுதவி

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு பகுதியில் வெங்காயச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக 45 வெங்காயச் செய்கையாளர்களுக்கு பருத்தித்துறை இலங்கை வங்கி காலபோக விவசாயக்கடனுக 5 லட்சம் ரூபாவை வழங்கி உதவியுள்ளது.

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

புலோலி மேற்குப் பகுதிக்கு கடன் வழங்க உத்தியோகத்தருடன் சென்று வெங்காய அறுவடையைப்பார்வையிட்ட அவர் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியபோதே மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கூட்டம் புலோலி மேற்கு விவசாயிகள் சங்கத்தலைவர் திரு. எஸ். விஸ்வநாதன் தலைமையில் மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெற்றது. வங்கி முகாமையாளர் திரு. மகாலிங்கம் மேலும் கூறியதாவது;

விவசாய அபிவிருத்திகளை மேம்படுத்தி விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதை இலட்சியமாகக் கொண்டே விவசாயிகளுக்கான கடன் உதவிகளை இலங்கை வங்கி வழங்கி வருகின்றது. இப்பகுதி விவசாயிகளுள் இலங்கைவங்கியிலிருந்து வழங்கப்பட்ட கடன் உதவியோடு தங்கள் விடாமுயற்சியால் சிறந்த வெங்காய அறுவடையைப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இக் கடன் பெற்ற விவசாயிகள் வெள்ளம் நோய்த்தாக்கம் போன்றவற்றினுல் பாதிக்கப்பட்ட போதும் விடாமுயற்சியினுலேயே சிறந்த விளைவைப் பெற்றுள்ளனர். வங்கியில் கடன்பெற்ற விவசாயிகள் தாங்கள் பெற்ற கடனை நாணயமாகத் திருப்பி செலுத்தித் தொடர்ந்தும் வங்கியின் சேவைகளைப்பெற்றுக்கொள்ள வேண்டும். வங்கிகளில் கடனை மட்டும் பெறுவதோடு நின்றுவிடாது தங்களது பிள்ளைகளின் எதிர்காலத்தை வளம்படுத்துவதற்காக இலங்கை வங்கியினுல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சேமிப்புத்திட்டங்களில் சேர்ந்து சேமிக்கவும் வேண்டும்.

கடன்வழங்கு உத்தியோகத்தர்களானதிரு. ஆர். பஞ்சலிங்கம், திரு. கே. சிவகுமார் ஆகியோரும் விவசாயிகளான திரு. கே. தங்கராஜா, திரு. எஸ் செல்வராஜா, திரு. கே அருளம்மலம் ஆகியோரும் உரையாற்றினர். (52)

# "சட்டவிரோதமின்பாவனைக்கு சாவுமணி அடியுங்கள்! மீறினுல் மன்னிப்பும் இடையாது"

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி எச்சரிக்கை

(மட்டுவில்)

''சட்டவிரோத மின் பாவனை உடனடியாக நிறுத்தப்படவேண்டும் மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எக் காரணம்கொண்டும் சட்டவிரோத மின்பாவனை ஒரு நாளேனும் அனுமதிக்கப்படமாட்டாது. இந்த எச்சரிக்கையை மீறுவோறுக்கு மன்னிப்புக் கிடையாது.''

இவ்வாறு கடுமையான எச்சரிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சி பிரதேச அரசியல் பிரிவு அறிக்கைமூலம் விடுத்துள்ளது, அரசியல் பொறுப்பாளர் திரு. கே. பாப்பா இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

''சட்டவிரோதமின்பாவனை சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கு மின்சார சபையினர் பாரதூரமான புகார்களை எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளனர். சட்டவிரோத மின் பாவனையால் மின்சார சபையினுக்குப் பாரிய இக்கட்டான நிலைமை தோன்றியிருப்பதாக

(5-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

தூய இதயத்திலிருந்தே நல்வாழ்வு என்னும் கனி உண்டாகின்றது.

— ஆன்ரேர் வாக்கு

## நமது நோக்கு

### ஜப்பான் தரும் பாடம்!

இரண்டாவது உலகப் போரில் ஜப்பானை அடி பணிய வைத்தது அமெரிக்காவின் இரு அணுகுண்டு கள்.

நாகசாகி, ஹிரோசிமா ஆகிய இரு நகரங்களும் நாசமாகின; அணுக்குண்டின் அழிக்கும் சக்தி பற்றி ஜப்பான் மாத்திரமல்ல, உலகம் முழுவதுமே அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.

45 ஆண்டுகளுக்குப் பின் இன்றைய ஜப்பானின் நிலை என்ன? உலகின் சக்திவாய்ந்த பொருளாதார வல்லரசாகத் தலைநிமிர்ந்து நிற்கின்றது. சர்வதேசச் சந்தையில் அமெரிக்காவிற்குத் தலைவலியைத் தரு கின்றது.

அந்த நாட்டு மக்களின் உழைக்கும் திறன் உலகப் புகழ் பெற்றுவிட்டது. அது நமக்கு நல்ல பாடமாக அமையவேண்டும்!

அண்மையில் அந்த நாட்டின் பிரதமர் கைபு எமது நாட்டுக்கு வருகைதந்திருந்தார்.

ஒரு நாட்டின் வெளிநாட்டு வர்த்தகம் சீராக வளர, சந்தைகளைத் தமது கைகளுள் வைத்திருக்க அரசாங் கத் தலைவர்களின் நல்லெண்ண விஜயங்கள் பெரிதும் உதவுகின்றன.

எனவே, 32 ஆண்டுகளுக்குப் பின் அந்த நாட்டுப் பிரதமர் எமது நாட்டுக்கு வருகை தந்திருப்பது பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

ஏற்கனவே, 1989 செப்டம்பரில் அவர் அமெ ரிக்கா, கனடா, மெக்சிக்கோ ஆகிய நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்.

1990 ஜனவரியில் பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து ஐரோப்பிய சமூகத்துடனான வர்த்தகத் தொடர்புகளை வலுப்படுத்தியிருந்தார்.

அது மாத்திரமல்ல. சோவியத் ருஷ்யாவின் பிடியில் இருந்து விலகிச் சென்றுகொண்டிருக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளான போலந்து, ஹங்கேரி நாடு களுக்கும் சென்றிருந்தார். அந்த நாடுகளின் வர்த்த கத்தினையும் தமது நாட்டுக்குச் சாதகமானமுறையில் திருப்பிவிட முயன்றிருக்கிறார்; கடனுதவி என்ற வலையை வீசிவிட்டு வந்திருக்கிறார்.

தற்போது, ஆசியாவிலே தனது நாட்டின் நலன்களை வளர்த்திட ஐந்து நாடுகளுக்கு ஒன்பது நாள் விஜய மொன்றை மேற்கொண்டிருக்கின்றார்.

தென்காசியாவில் அதிக உதவி வழங்கும் நாடாக ஜப்பான் மாறிவருவதை நாம் மறந்துவிடலாகாது.

ஜப்பானிலும் இலங்கையருக்கு வேலைவாய்ப்பு என்ற தூண்டில் போடப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே இலங்கையின் அபிவிருத்தித் திட்டங் களுக்கு, பொருளாதார தொழில் நுட்ப உதவிகள் அங்கிருந்து வருகின்றன.

மேலும் ஆக்கபூர்வமான உதவிகளுக்கு ஜப்பானியப் பிரதமர் வருகை வழிவகுக்கும் என நம்புகிறோம்.

ஆனால், புதுடில்லியில் அவர் தெரிவித்த கருத்துக் கள் ஆழமான சிந்தனைக்குரியன.

அவர் கூறியதென்ன? அரசியல் உறுதிப்பாடு இல்லா விடில் வெளிநாட்டு முதலீடு கிடைப்பது கஷ்டம் என்றிருக்கிறார்.

காஷ்மீர் பிரச்னையை விரைவாகத் தீர்த்துக்கொள் ளுங்கள் என இந்தியாவையும், பாகிஸ்தானையும் மறைமுகமாக வலியுறுத்தியதாகவே அரசியல் விமர்ச கர் இதனை எடுத்துக்கொள்ளுகின்றனர்கள்.

ஆனல் அவர் இப் 'பிராந்தியத்தில்' எனப் பொது வாகக் கூறிவைத்திருக்கிறார்

எமது நாட்டுக்கும் அவர் விடுத்திருக்கும் எச்சரிக் கையாகவே இதனைக் கருதுகிறோம். இனப் பிரச்சனை உரியமுறையில் தீர்க்கப்படாவிடில் வெளிநாட்டு உதவிகள் தடைப்படும், பொருளாதார அபிவிருத்தி பின்தள்ளப்படும் என்ற அவரது எச்சரிக்கையை அர சாங்கம் கவனத்திற்கொள்ளும் என நம்புகிறோம்.

### இன்று கார்ல் மார்க்ஸ் நினைவுதினம்

# மாமேதையின் வாழ்வும் பணியும்

கார்ல் மார்க்ஸின் பொது வுடைமைத் தத்துவம் பரவிக் கொண்டமைக்கு முதன்மை யான காரணம், 'மூலதனம்' என்ற நூலாகும். 'மூலதனம்' மூன்று தொகுதிகளும் பாட்டாளி வர்க்கத்திற்குக் கிடைத்த பரிசு என்றே கூறலாம். மார்க்ஸின் 'மூலதனம்' எழுந்தமைக்குக் காரணமும், மூலதனத்தின் மூலம் பாட்டாளி வர்க்க சிந்தனை வளர்ச் சியும், எழுச்சியும் வரலாற்றின் முக்கியமான நிகழ்வுகளாகும். முதலாவது அகிலம் நிறுவப் பட்டிருந்த காலகட்டத்தில், அரசியல் ரீதியிலான வேலைத் திட்டங்கள் நடைமுறைப்

(5ம் பக்கம் பார்க்க)

### நாளை ஈஸ்வரம்மா தினம்

# ஈஸ்வரம்மா ஓர் தெய்வத்தாய்



ஈஸ்வரம்மா பகவான் சத்தியசாயி பாபாவின் அன்னையார். "நான் வந்த பணி என்னை அழைக்கின்றது" என்று சுவாமி கூறியபொழுது அன்னையாருக்குத் தாங்க முடி யாத மனக்கவலை ஏற்பட் டது. தன் மகன் நன்ருகப் படித்து அறிவாளியாக வர வேண்டும் என விரும்பிய அன்னையாருக்கு இக் கூற்றை ஏற்றுக்கொள்வது கடினமாக இருந்தாலும் சத்தியாவை 'சுவாமி' என்று எல்லோரா லும் அழைக்கத் தொடங்கிய தும் அவரது அவதார மகிமை விளங்கத் தொடங்கி யது.

ஈஸ்வரம்மாவுக்கு இயற்கை யாக மென்மையான உள்ளம் உண்டு. மற்றவர்கள் கஷ்டப் படுவதைக் காணச் சகிக்காக மாட்டார். சுகயீனமுற்ற வர்களுக்கு ஓர் வைத்திய சாலையை சுவாமி கட்டத் தொடங்கியதும் எவ்வித பெரு மையுமில்லாமல் மிக்க மகிழ்ச்சியுடன் அன்னையாரும் மண், செங்கல் முதலியவற் றைச் சுமந்து எடுத்துக் கொடுத்தார். சுகயீனமுற்ற பெண்களுக்குத் தைரியம் சொல்லி வேண்டுவன செய்து தன் சிரமத்தையும் பாராமல் மலையில் ஏறி தங்களை அக்க றையுடன் கவனிக்க ஓர் அன் புத்தாயார் இருக்கிறார் என் பதை நிரூபித்தார். சிறுவதில் விதவைகளாகிச் சமூகத்தால் தள்ளிவைக்கப்பட்ட இளம் பெண்கள், கணவனால் கைவி டப்பட்டவர்கள், பேய், தீய சக்தியால் தீண்டப்பெற்றவர் கள் என்று புட்டபர்த்திக்கு அழைத்துவரப்பட்டவர்கள் எல்லோரையும் இரக்கத்து டன் பேணிப் பாதுகாத்து அன்புடன் வருடிக் கொடுத்து ஆறுதல் படுத்தும் தாயாக அமைதிப்படுத்தியிருக்கிறார். அவரிடம் புத்திக் கூர்மையும், தைரியமும் வற்றாத ஊற்றாக இருந்துபாய்வதைக் கண்டனர் அம்மையாரின் குடும்பத்தில் ஏற்பட்ட துக்க நிகழ்ச்சிகளை யும். சோதனைகளையும் தாங் கிக்கொள்ளச் சுவாமியே அன் னையாருக்கு வருடிக்கொடுத்து ஆறுதல்கூறித் தேற்றினர். வாழ்க்கை என்றும் ஈடுசெய்ய முடியாத துன்பத்தின் முடி வைக் குறிக்கப்போகும் திரை தான் மரணம் என்பதை உணர்ந்து அமைதியையே நாடினர். சுவாமியுடன் இந் தியா முழுவதும் யாத்திரை சென்ற அன்னையார் பல வித அனுபவங்களைப் பெற் ருர். சுவாமியின் வாழ்க் கையே அவர் அன்னையாருக் குக் கூறும் செய்தியாக அமை ந்துள்ளது.

பெண்களைத் தாய்மார்கள் என்று கூறிய சுவாமி, அவர்க ளுக்குப் படிக்க வசதிஏற்படுத் திக் கொடுத்ததில் அன்ன யாருக்கே மிக்க மகிழ்ச்சி ஏற் பட்டது. அத்துடன் பெண் கள் ஓங்காரம் சொல்லிக் கட வுளை அடைகின்ற மார்க்கத் தைக் கடைப்பிடிக்க, ஆண்க ளைப் போலச் சரிசமமாகச் சகலதையும்கற்க, சகலநிகழ்ச் சிகளிலும் பங்குகொள்ள சுவாமி ஒழுங்கு செய்ததும் ஈஸ்வர அன்னையாருக்குத் தான் மிகவும் மகிழ்ச்சி ஏற் பட்டது. சுவாமியே அம்மை யாருக்குப் "பரமானந்தத் தின்" அடிப்படைக் காரண த்தை விளக்கினர். நிர்மல மான மனத்துடன் எல்லா வற் றையும் ஏற்கப் பழகிய அன் னையார், சுவாமி, பக்தர் களின் ஆனந்தமே தன் ஆகா ரம் என்று கூறியதை நிதர் சனமாகக் கண்டார்.

அம்மையாரின் உண்மை யான பக்திக்கு அவரின் இறுதி நிமிடங்களே சாட்சியாகும். பங்களூரில் கோடை வகுப் புக்கள் நடந்து கொண்டிருந் தன. அன்னையார் விடியற் காலையிலேயே குளித்து முடி டித்து காப்பி அருந்தியபின் வெகு சந்தோஷமாக உன் விருந்தையில் இருந்தார். சுவாமி குளித்துக் கொண்டி ருந்தார். திடீரென அம்மை யார் குளியலறைப் பக்கம் சென்றுகொண்டு மும்முறை "சுவாமி" என அழைத்தார். அவரின் அழைப்பைக்கேட்ட சுவாமியும் 'வருகிறேன், வரு கிறேன்' எனக் கூறினர். ஈஸ்வர அம்மாவின் கற்பூர ஜோதி அணைந்து விட்டதை அறிந்த மக்கள் மிக்க கவலை கொண்டனர். அவர் இறந்த நாள் சிறுவர்நாளாகக் கொண் டாடப்படவேண்டும் என்று சுவாமியே பணித்துள்ளார். ஜெய்சாய்ராம்.

—காந்தி

## மக்கள் கருத்து

### கௌரவ கல்வியமைச்சர் கவனிப்பாரா?

எனது மகன் ஸ்ரீ ஸ்ரீகுகன் புத்தளமாவட்டத்தில் பயிலு நர் ஆசிரியர் ஆட்சேர்ப்புக் கான முதலாவது தேர்வில் (12-09-89) 444.5 புள்ளி களைப் பெற்ருர். சிலாபம் கல்வியதிபருக்கு முறையிட்டு மீண்டுமொருமுறை 10-12-89 இல் அழைக்கப்பட்டு இரண் டாவதுமுறை 479.5 புள்ளி களைப் பெற்ருர். அதன் பின் னர் மூன்ருவது தேர்வுக்கு 26-01-90 இல் சிலாபம் கல்விக்கந்தோருக்கு அழைக் கப்பட்டு புள்ளிகளிடப்பட் டது.

எனது மகனிலும் பார்க்க எவ்வளவோ குறைந்த புள்ளி களைப் பெற்ற ஒருசில மாணவ ருக்கு 15-02-90 முதல் பயி லுநர் ஆசிரியர் நியமனங்கள் கிடைக்கப்பெற்று எனது மக னுக்குக் கிடைக்காதபடியால் நான் சிலாபம் கல்விக்கந்தோ ருக்குச் சென்று (08-03-90) பார்த்தபோது தவறுதலாக சில சான்றிதழ்களுக்குப்புள்ளி கள் இடாமல் இருப்பது காணப்பட்டது. பிரதம கல்வி யதிகாரிக்குச் சுட்டிக்காட்டிய போது பழையபடி 479.5 புள்ளிகள் கிடைக்கப் பெற் றன.

இதற்கிடையில் மகனிலும் குறைந்த புள்ளிகள் பெற்ற சிலருக்கு நியமனங்கள் கொடுக் கப்பட்டுவிட்டன. இதுவிஷய மாக மேன்மைதங்கிய ஜனாதி பதியவர்களிடம் முறையிட விரும்பியபோது பிரதம கல்வி யதிகாரி மகனுக்கு பயிலுநர் ஆசிரியர் நியமனம் தருவதாக வும் வாக்குறுதியளித்து என் னைத் தனது கந்தோருக்கு 21-03-90 க்கு வரும்படிகூறி னர்.

ஒன்றரை மாதங்களுக்கு மேலாகிவிட்டது. இவ்விடய மாக சிலாபம் கல்வி அதிப ருக்கும், கல்விச்சேவை ஆணைக் குழுவுக்கும், புத்தள மாவட்ட மாகாணசபை உறுப்பினருக் கும், வடமேல் மாகாணமுதல் வருக்கும், சிலாபம் பிரதம கல்வி அதிகாரிக்கும், தமிழ் முஸ்லிம் கல்விக்குப் பொறுப் பான கௌரவ இராஜங்க கல்வியமைச்சருக்கும் கடிதங் கள் எழுதியும் யாதொரு சாத கமான பதிலும் கிடைக்க வில்லை.

எம். எஸ். ஸ்ரீகாந்தன், புத்தளம்.

### கைதடியில் பாராட்டு விழா

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கத்தலைவராக தெரிவுசெய்யப்பட்ட ப. செல் லத்துரை, பல்கலைக்கழகத் திற்கு தெரிவு செய்யப்பட்ட செல்வி க. சுகந்திஆகியோரை கௌரவித்துக்கைதடியில் நாளை பாராட்டுவிழா நடைபெற வுள்ளது.

சரஸ்வதி சனசமூக நிலையத் தின் ஏற்பாட்டில் கலைவாணி வித்தியாலய மண்டபத்தில் இவ்விழா நடைபெறவுள்ளது.

### சமாதான நீதவான்

(பருத்தித்துறை)

இளைப்பாறிய அரசாங்க அதிபர் திரு. கே. தேவசிகா மணி நீதியமைச்சினுல் சமா தான நீதவானுக நியமிக்கப் பட்டுள்ளார்.

சமாதான நீதவானுக திரு. தேவசிகாமணி அண்மையில் யாழ். மாவட்ட நீதிபதி திரு. எஸ். பாலவடிவேல் முன்னி யில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இலங்கை நிர்வாகசேவை அதிகாரியான திரு. தேவசிகா மணி வவுனியா மாவட்டத்தி லும் முல்லை மாவட்டத்திலும் பணியாற்றி கடைசியில் கிளி நொச்சி அரசாங்க அதிபராக இருந்து இளைப்பாறினர். (52)

## பலதும் பத்தும்

### தப்பியது எப்படி?

1987 — நெருக்கடியான காலப்பகுதி ...ஒரு நாள் ...? இரட்டையர்களாகப் பிறந்து ஒற்றையாகிவிட்ட ஒரு போராளி — வீதியிலே வரும்போது திடீரென இந்திய இரா ணுவத்தின்சுற்றிவளைப்பு...!

பயிற்சி பலன் தந்தது — பதட்டமடையவில்லை; மெதுவாக வாழைத் தோட்டமொன்றில் இறங்கி நடக்கிறான்! ஆனல்... ! அங்கு என்ன? சீக்கியச் சிப் பாய் ஒருவன் தூரத்தே வந்து கொண்டிருக்கிறான். விவேகம் வேலை செய்தது... எப்படி ... ?

சட்டையைக்கழட்டினன்; அருகே நின்ற விவசாயியி டம் கொடுத்துவிட்டு, அவ னது சால்வையை வாங்கி னன்; தலையிற் கட்டிக் கொண்டான்.

குதிரையேற்றப் பயிற்சிக் காகக் குதிரையொன்றை வளர்த்த அந்தப் போரா ளிக்கு மாடொன்று கை கொடுத்தது!

மெல்ல அதனை அவிழ்த் துக் கொண்டு, மேய்க்கக் கொண்டுபோவது போலச் சென்று தப்பிவிட்டான்...? யார் அந்தப் போராளி? "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமுண்சிரிப்பும் கொண்ட" அழகிய அக்காச்சிதான்! பாவம், அவன் இன்றில்லை!

வாணி

# "கடந்த சில வருடங்களில் மட்டும் 5 லட்சம் பனை மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன!

## பனை அபி. சபைத் தலைவர் 'நடா' தகவல்

(யாழ்ப்பாணம்)

'வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பனைவளத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் நலனை மனதிற்கொண்டு ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் இரு ஊழியர்களை நியமித்து, கசிப்பு, சட்ட விரோத மதுவிற்பனை போன்ற விடயங்களைத் தடைசெய்ய முன்வந்தமைக்கு அனைவரின் சார்பிலும் தமது நன்றியை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவருக்குத் தெரிவிப்பதாகப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவரும், வடமாகாணத் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சமாசச் செயலாளருமான திரு. க. நடராசா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நடவடிக்கையினால் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் வருமானமும், எதிர்காலமும், பனைவளத்தின் ஒரு பகுதியும் உறுதிப்படுத்தப்படுகிறது என்றும் அவர் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''எமது இயற்கை மூலவளமான பனைவளத்தை வீணாகத் தறித்து, அழிக்கும் நடவடிக்கையையும் உடனடியாகத் தடைசெய்யும்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைக் கோரியுள்ளேன். கடந்த சில வருடங்களில் வீணாகத் தறித்து அழிக்கப்பட்ட 5 லட்சத்துக்கும் மேற்பட்ட பனை வளத்தை ஈடுசெய்யும் விதத்தில் வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதிலும் 20 லட்சம் பனம் விதைகள் நாட்டுவதற்கும் பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கைஎடுத்துள்ளது. வெளிநாட்டு மூலதனம்பனம் பழத்தை அடிப்படையாகக் கொண்ட பாரிய அளவிலான தொழிற்சாலை ஒன்றை வடமராட்சியிலும் ஏற்றுமதிக்கான தும்பு, 'பிரஷ்' தொழிற்சாலை ஒன்றை மன்னாரிலும் நிறுவும் நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளன. (54)

---

### சட்டவிரோத

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளனர். இது சம்பந்தமாக முன்பு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சிப்பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா பத்திரிகைகள் மூலம் அண்மையில் அறிக்கை விடப்பட்டிருந்தது தெரிந்ததே. அப்படி அறிக்கைவிடப்பட்டிருந்தும்கூட சட்டவிரோதமின் பாவனையாளர் அதுபற்றி அக்கறை கொள்ளாதது கவலைதருகிறது. மீண்டும் ஓர் அறிக்கையை விடவேண்டிய நிலையினை ஏற்படுத்தியுள்ளது. இப்பொழுது நாம் மிகுந்த அக்கறையுடன் இதுபற்றிக் கண்காணித்து வருகிறோம். எமது தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் மிக உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறார்கள். பொதுமக்கள் இது பற்றிப் பொறுப்புடன் கண்காணுத்து வருகிறார்கள். சட்டவிரோத பாவனையினை ஒழித்து மின்சேவையில் புதிய அபிவிருத்தியை ஏற்படுத்தச் சகல பொதுமக்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறார்கள். இந்த விடயத்தில் பொது மக்களனைவரதும் ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். உடனடியாக சட்டவிரோத மின்பாவனைக்குச் சாவு மணி அடியுங்கள். சட்டத்திற்குட்பட்ட மின் பாவனைக்கு வழிதேடுங்கள். சட்டவிரோத மின்பாவனை கண்டுபிடிக்கப்பட்டால் மன்னிப்புக்கு இடமில்லை'' என்று அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (82)

---

# ஆசிரியர்களுக்கு வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

கிளிநொச்சியியில் ஆசிரியர் நலன் கருதி வீடமைப்புத்திட்டம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமெனக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் கல்விச் சேவையாளர் சிக்கனக் கூட்டுறவுச் சங்கக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கான தீர்மானத்தை வடபிரதேச பிரதிநிதி திரு. ந. சிவபாதம் கொழும்பில் நடைபெற்ற மேற்படி சங்கக் கூட்டத்தில் கொண்டு வந்தார்.

யாழ்ப்பாணத்தில் விரைவில் இச்சங்கத்தின் கிளை ஒன்று திறக்கப்பட வேண்டுமென்ற தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதனால் ஆயிரக்கணக்கான இதன் அங்கத்தவர்கள் பயன் அடையக் கூடியதாயிருக்கும் எனக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (139)

---

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தினம், இம்மாதம் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட உள்ளது.

இத்தினத்தையொட்டி, சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை நடைபெற உள்ளன.

8ம் திகதி காலை ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடைபெற உள்ளதுடன், வாழை நார்ப் பொருள்கள், பனை உற்பத்திப் பொருள்கள் கண்காட்சி, ஓவியக்கண்காட்சி சித்திரக் கண்காட்சி என்பன யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் செஞ்சிலுவைச் சங்க இளைஞர், யுவதிகளினால் இரத்த தானம் வழங்கலும் நடைபெறும்.

மாலை நாதஸ்வர இசை, வீணை இசை, பாட்டு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. (து)

---

### சமூக முன்னேற்ற

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளும் மேற்படி சனசமூக நிலையத்தில் நடைபெற்றன.

ஆண்டு நிறைவு விழாவைத் தொடர்ந்து நடப்பு வருடநிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

தலைவர்: ம. இராசேந்திரன், உப தலைவர்: க. பரமநாதன், செயலாளர்: மு. சிவஞானம், உப செயலாளர்; க. தமிழ்நேசன், பொருளாளர்: க. சத்தியமூர்த்தி என்பவர்கள் இத்தெரிவில் தெரிவு செய்யப்பட்டனர். செயற்குழு உறுப்பினர்களாக அ. சற்குருநாதன், க. செல்வராசா, அ. யோகானந்தன், சி. அப்புத்துரை, சி. பொன்னையா, த. சிவலிங்கம், சி. சிவநேசன், வே. இராசகுரு, ந. தயா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (56)

---

# மோட்டார்சைக்கிள் விபத்தில் நால்வர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துகளில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ். மாட்டின் வீதியில் ஞானசீலன் தினேஷ்(15வயது) என்பவரும், புங்குடுதீவில் தம்பிப்பிள்ளை யுபேட் (40-வயது) என்பவரும், யாழ். காங்கேசன்துறை வீதியில் பொன்னம்பலம் சுந்தரேஸ்வரன் (34-வயது) என்பவரும், நல்லூரில் அதே இடத்தைச் சேர்ந்த மாணிக்கம் சின்னப்பு (65-வயது) என்ற வயோதிபபெண்ணும் மோட்டார் சைக்கிள் விபத்தினால் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த நால்வரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56)

---

# பருத்தித்துறை - கொழும்பு இரவு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

[புலோலி]

பருத்தித்துறை - கொழும்பு இரவு பஸ்சேவை மீண்டும் கடந்த முதலாம் திகதிமுதல் ஆரம்பமாகியுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ இச் சேவையை மீண்டும் நடத்திவருகிறது.

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு இரவுச்சேவையிலீடுபடும் பஸ்வண்டி தினமும் மாலை 5-30 மணிக்கு அச்சுவேலியிலிருந்து புறப்பட்டு உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஊடாக பருத்தித்துறையை வந்தடைந்து பருத்தித்துறையிலிருந்து இரவு 7 மணிக்குப் புறப்பட்டு நெல்லியடி ஊடாக கொழும்பு நோக்கிச் செல்கிறது.

கொழும்பிலிருந்து தினமும் பருத்தித்துறைக்கான இரவு பஸ் சேவையும் நடைபெற்று வருகிறது. (61)

---

# சாவகச்சேரி பகுதியில் மலேரியா அபாயம்!

(மட்டுவில்)

சாவகச்சேரிப் பகுதியில் மலேரியாநோய் பரவிவருவதாகபுள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

மலேரியா காய்ச்சலுடன் மட்டும் நின்றுவிடாது மூளை மலேரியா நோயும் தலைதூக்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியில் தினசரி நடைபெறும் மலேரியா இரத்தப் பரிசோதனை அறிக்கையின் மூலம் இந்தவிபரங்கள் தெரிய வந்துள்ளன. இப் புள்ளி விபரங்கள் மேலும் தெரிவிப்பதாவது:

''1990-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மொத்தம் 500 நோயாளரின் இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 46 பேருக்கு மலேரியா நோய் கண்டுள்ளது. அதில் ஒருவருக்கு மூளை மலேரியா கண்டுள்ளது.

பெப்ரவரி மாதத்தில் 100 நோயாளர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்; அதில் எண்மருக்கு மலேரியாநோய் கண்டுள்ளது. மார்ச் மாதத்தில் 500 நோயாளர் மீது பரிசோதனைநடத்தப்பட்டுள்ளது. இதில் 36 பேருக்கு மலேரியா நோய் கண்டுள்ளது. 5 பேருக்கு மூளை மலேரியா நோய் கண்டுள்ளது.

இப்பகுதியில் இப்பொழுது நெருப்புக்காய்ச்சலும் தலைதூக்கியுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (82)

---

## பிறப்பு - இறப்பு அத்தாட்சி பத்திரங்கள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை காணிப் பதிவு அலுவலகத்தில் மீண்டும் புதன்கிழமை தொடக்கம் பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுமென மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு. ரீ. மாணிக்கவாசகர் அறிவித்தல் நடாத்த முன்வந்துள்ளார்.

இவ்வலுவலகத்தில் இவ்வத்தாட்சிப் பத்திரங்களுக்கான படிவங்கள் இல்லாமையால் விண்ணப்பங்கள் ஏற்பதை அலுவலகம் நிறுத்தியிருந்தது. தற்போது கொழும்பிலிருந்து இப்படிவங்கள் மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு. மாணிக்கவாசகரால் கொண்டு வரப்பட்டதையடுத்து மீண்டும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. (52)

---

### மாமேதை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கார்ல் மார்க்ஸ் தொழிலாளர்களுக்குப் போதனைகளை வழங்கினார்.

மார்க்ஸின் உற்ற நண்பரான பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் மூலதனம் நூல் எழுதுவதற்குப் பெரும் துணையாகவும், பக்கபலமாகவும் இருந்தார்.

மூலதனத்தின் முதலாவது தொகுதி 1867 செப்டம்பரில் ஹாம்பூர் பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டது. ஆயினும் மூலதனம் மூன்று தொகுதிகளும் கார்ல் மார்க்ஸ் 1864 இலே கைப்படிவ நகல்களாகத் தயாரித்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது தொகுதி மூலதனம் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் 1885இல் வெளிவந்தது. இத்தொகுதி வெளிவரும் காலத்தில் கார்ல் மார்க்ஸ் உயிருடன் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மார்க்ஸின் வரலாற்றுப் பணி ஒருபோதும் எவராலும் மறக்கப்பட, மறுக்கப்படமுடியாத விடயமாகும்.

மூலதனம் நூலின் மூன்றாவது தொகுதி 1894இல் வெளிவந்தது. மாபெரும் மேதையாகவிளங்கிய கார்ல் மார்க்ஸ் 1883 மார்ச் 14இல் மரணித்தார். மார்க்ஸ் மரணிக்கும் முன்பாக, 1881 டிசம்பர் 2இல் அவரின் மனைவி ஜென்னி மறைந்தார். ஜென்னி மார்க்ஸுக்கு மனைவியாக மட்டுமின்றி, போதனையாளராகவும் பணி புரிந்தார்.

மார்க்ஸின் தத்துவங்களினாலேயே பாட்டாளி வர்க்கம் எழுச்சி பெற்றது. அடிமைப்பட்டுக்கிடந்த தொழிலாள வர்க்கம், செங்கொடி உயர்த்தி செந்தளத்தில் செங்குருதியையும் சிந்தி வீறுநடை போடுகின்றது.

-- சார்ள்ஸ்

---

## பயிலுநர் ஆசிரியர் சங்கம் அங்குரார்ப்பணம்

(பருத்தித்துறை)

வடமராட்சிக்கல்விக் கோட்டப்பகுதி பயிலுநர் ஆசிரியர்களுக்கான பயிலுநர் ஆசிரியர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் கே. தர்மலிங்கம் உபதலைவர்கள் எஸ், யாதவானந்தன், வீ. இந்திரலிங்கம் திருமதி டொறின் மன்மத நாயகம், செயலாளர் கே. ஸ்ரீசந்திரன், உப-செயலாளர் திருமதி ம. ஞானப்பிரகாசம் பொருளாளர் செல்விரீ. வசந்தமலர்

கொத்தணிகள் ரீதியாகத் தெரிவான நிர்வாக சபை உறுப்பினர்கள்:

பருத்தித்துறை கொத்தணி வே. சிவதாஸ் செல்வி ஈ.சாந்தீஸ்வரி.

புலோலி கொத்தணி செல்வி எஸ். வினித்தா. இ. சுகந்தன்

கரவெட்டி கொத்தணி செல்வி எஸ். இ. ராஜகுமாரி, ஏ. சுப்பிரமணியம்.

நெல்லியடி கொத்தணி செல்வி கே. அனுஷியா, செல்வி. ஆர். வெண்மதி.

உடுப்பிட்டி கொத்தணி கே. கனகேஸ்வரன், செல்வி ஆர். சாரதா.

உடுத்துறை கொத்தணி பி. தர்மகுலேந்திரன், செல்வி மேரி ஏஞ்சலா.

நாகர்கோவில் கொத்தணி செல்வி பி. ராஜகுமாரி, செல்விகே. கனகரட்னேஸ்வரி

வல்வெட்டித்துறை கொத்தணி மு. இரவீந்திரன், செல்வி ரீ. சுகன்யா. [52]

# "வடமோடியில் ஆடல்கள் அதிகம்! தென்மோடியில் பாடல்கள் அதிகம்"

## நூல் வெளியீட்டில் யாழ். ஆயர் கருத்து

[யாழ்ப்பாணம்]

"நாட்டுக்கூத்துக்களில் வடமோடி, தென்மோடி என்ற இரு பிரிவுகள் உண்டு. வடமோடியில் ஆடல் அதிகம், பாடல்கள் குறைவு. தென்மோடியில் பாடல்கள் அதிகம். ஆடல் குறைவு. இதுவே இவை இரண்டிலும் உள்ள முக்கியமான வித்தியாசங்கள் ஆகும்" என்று யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை தெரிவித்தார்.

யாழ். திருமறைக்கலாமன்ற அரங்கில் நடைபெற்ற கவிஞர் தேவதாசனால் பாடப்பட்ட 'வித்துக்கள்' தென்மோடி நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டு ஆசியுரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அருட்திரு எஸ். கில்லறி ஜெபநேசன் தலைமையில் இந் நூல் வெளியீட்டுவிழா நடைபெற்றது,

கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"போர்த்துக்கேயர் காலத்தில் யேசுசபை குருமார் தெல்லிப்பழையை நடுநிலையமாக வைத்து கத்தோலிக்க மத பிரசாரத்தை ஆரம்பித்தார்கள். தெல்லிப்பழையில் நாடக மேடையையும் அமைத்து நாட்டுக்கூத்துகள் மூலம் கத்தோலிக்க சமயத்தை அறிமுகப்படுத்தினார்கள். சந்தியோகு அம்மானை, ஞானபள்ளு இலக்குய நூல் ஆகியவவை தெல்லிப்பழை மேடையில் அரங்கேற்றப்பட்டதாக வரலாறு கூறுகிறது. தென்னிந்தியாவிலிருந்து வந்த யேசுசபை குருமாரால் அறிமுகப்படுத்தப்பட்ட நாட்டுக்கூத்துகள் தென்மோடி எனப்பட்டன.

ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க குருமார் பங்களூர், கோவா போன்ற இடங்களிலிருந்து வந்து மதபிரசாரங்களைச் செய்தார்கள். வட இந்தியாவிலிருந்து வந்த கோவாக் குருமாரால் அறிமுகப்படுத்தப்பட்ட நாட்டுக்கூத்துகள் வடமோடி எனப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் இன்றும் தென்மோடி மரபை பின்பற்றி நாட்டுக்கூத்துகள் நடிக்கப்பட்டு வருகின்றன. தென்மோடி மரபில் கவிஞர் தேவதாசன் நாட்டுக்கூத்தை இயற்றியுள்ளார்" என்றார். (153)

# "போர்க்களத்திலும் இலக்கியங்கள் இங்கு படைக்கப்படுகின்றன!

## அன்று காத்தவராயன் இன்று களத்தில்காத்தான்"

(அச்சுவேலி)

"தமிழீழ மக்களிடையே பிரதேச ரீதியில் நிலவிய வேறுபாடுகள் நீக்கப்பட்டு, 'ஈழத் தமிழ் இனம்' என்ற எண்ணப்பாட்டுடன் ஒன்றுபட்டு தமிழ் மக்கள் திரு. பிரபாகரன் தலைமையில் அணி திரண்டிருப்பது தமிழ் இனத்தின் விடுதலைக்கு நல்ல அறிகுறியாகும்" என்று திரு. சு. வைகுந்தநாதன் தெரிவித்தார்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணியின் கலை கலாச்சாரப் பிரிவினால் யாழ். மாவட்டத்தில் முதல்தடவையாக "களத்தில் காத்தான்" சிந்துநடைக்கூத்து அச்சுவேலி நாலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில் முன்றலில் மேடையேற்றப்பட்டது.

திரு. து. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற 'களத்தில் காத்தான்' நாடக மேடையேற்றத்தில் ஆசிரியர் திரு. சு. வைகுந்தநாதன் நாடகத்தை அறிமுகம் செய்து வைத்து மேலும் கூறியதாவது:-

'களத்தில் காத்தான்' சிந்து நடை நாடகத்தின்மூலம் பிரதேச ரீதியில் கலைஞர்களிடையே நிலவிய குறுகிய வேறுபாடும் பிரதேச ரீதியிலான வேறுபட்ட எண்ணப்பாடும் நீக்கப்பட்டுள்ளது.

"வடக்கு-கிழக்கு, வன்னி யாழ்ப்பாணம் என்ற வேறுபாட்டை மறந்து 'களத்தில் காத்தான்' நாடகத்தில் கலைஞர்கள் இணைந்து செயற்பட்டிருப்பது திரு. பிரபாகரன் தலைமையில் பிரதேச வேறுபாடுகளை-குறுகிய எண்ணப்பாடுகளை இல்லாமல் ஒழித்து தமிழ் இனம் விடுதலைபெற முனைந்துள்ளது. என்பதை தெளிவுபடுத்திக் காட்டுகின்றது.

"காலத்தின் தேவையை ஒட்டி இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. போர்க்களத்தில் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இது தமிழ் இலக்கியத்தின் தனிப்பெரும் சிறப்பியல்பு. இந்த வகையில் ஈழத் தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்ட உணர்வை. இந்திய இராணுவத்தின் அடக்குமுறையை 'களத்தில் காத்தான்'' சிந்துநடைக் கூத்து தெளிவாக புலப்படுத்திக்காட்டுகின்றது.

"புராண நாடகமாகிய 'காத்தவராயன்' நாடகத்தை அடியொற்றி நவீன முறையில் தமிழ் ஈழ விடுதலைப்'புலிகளின் விடுதலைப் போராட்டத்தை கலை, இலக்கிய ரசனையுடன் மேடையேற்றி காண்பிப்பது வரவேற்கத்தக்கது, பாராட்டுக்குரியது" என்றார். (74)

# மன்னார் செய்திகள்

### மேதினம்

மன்னார் மாவட்டத்தில் இம்முறை மே தினக் கொண்டாட்டங்கள் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. மன்னார் நகரத்தில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியினராலும் ஏனைய தலைமன்னார், பேசாலை, நானாட்டான், முருங்கன், அடம்பன், விடத்தல்தீவு போன்ற இடங்களில் ஆலய பரிபாலன சபையினராலும், தொண்டர் சங்கங்களினாலும் நடத்தப்பெற்றன.

இவற்றில் சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் போட்டி, உதைப்பந்தாட்டம், கைப்பந்தாட்டம், நீச்சல்போட்டி, கயிறு இழுத்தல் போட்டி ஆகியன இடம்பெற்றன.

### பொருட்கள் மீட்பு

வவுனியாவிலிருந்து பேசாலை வந்த ஒரு பிரயாணியிடம் 15,000 ரூபா பெறுமதியான வானொலி, ரேப், றெக்கோடர் போன்றனவற்றைப் பலவந்தமாக பறித்து கடற்கரையில் புதைத்து வைத்த நபர் வகையாக மாட்டிக்கொண்டார்.

இச்சம்பவம் அண்மையில் பேசாலையில் இடம்பெறறது. பொருட்களை பறிகொடுத்த நபர், பேசாலை பிரதேச விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. காசிமிடம் முறையிட்டதைத் தொடர்ந்து திரு. காசிம் தேடுதல் வேட்டை நடாத்தி, சம்பந்தப்பட்ட நபரையும், பொருட்களையும் கைப்பற்றி அந்த நபருக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பொருளை இழந்தவருக்கு பொருட்களை கையளித்தார்.

### மேதின விளையாட்டுப் போட்டி

மன்னாரில் மேதின விளையாட்டுப்போட்டிகள் மன்னார் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரால் நடாத்தப்பட்டன. இதற்கு மன்னார் பொறுப்பாளர் திரு. லக்ஸ் தலைமை தாங்கினார். நீச்சல் போட்டியும், படகு ஓட்டப் போட்டியும் மன்னார் சவுத்பார் வடக்கில் நடைபெற்றன.

நீச்சல் போட்டி: 1ம் இடம்: வி. சகாயம் குரூஸ் (பேசாலை), 2ம் இடம்: கு. கனிசியஸ் குரூஸ் (பேசாலை), 3ம் இடம்: யோ·பெனிற்ரோ (பறுநாற்று பேசாலை), 4 இடம்:இ.ராஜா (மன்னார்).

படகு ஓட்டப்போட்டி: 1ம் இடம்: எஸ்,தாசன் (சவுத்பார்), 2ம் இடம் யூட்காமினி (தாழ்வுபாடு). 3ம் இடம்: யூட்யஸ்ரின் (தாழ்வுபாடு), 4ம் இடம்: எட்வின் (பனக்கொட்டு).

இவனைத் தவிர மன்னார் விளையாட்டு அரங்கில் 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. இதில் பனக்கட்டுகொட்டு விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது. மேதினத்தை முன்னிட்டு இன்னும் பல சுவையான நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. வெற்றிபெற்ற போட்டியாளர்களுக்குத் தங்கப்பதக்கம் உட்படப் பல பெறுமதிவாய்ந்த பரிசுகள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சிகளை மன்னார் சிற்றூர் அவை அமைப்பாளர் திரு. பந்தா நெறிப்படுத்தினார்.

# புங்குடுதீவில் கடும் வரட்சி

(புங்குடுதீவு)

பருவமழை பெய்யாத காரணத்தால் புங்குடுதீவில் கடும் வரட்சி நிலவிவருகிறது

இந்நிலைகளால் அங்குள்ள பலர் வெப்பு நோய்களால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

மேலும் கடநத சில நாட்களாக இங்குள்ள சில குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை வாந்தி, வயிறோட்ட நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்

புங்குடுதீவின் பகுதிகளிலிருந்தும் அரசினர் வைத்திய சாலை தனியார் மருத்துவமனைகளில் இருந்தும் சிகிச்சைக்காக நோயாளர்கள் யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றார்கள்.

# புதிய அடையாள அட்டைகள் வழங்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

1972-73ம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய அட்டைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

புதிய அடையாள அட்டைகள் வழங்குவது தொடர்பாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் அறிவித்தல் மூலம் விரைவில் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவார். (து)

## ஆதீனத்தில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நாளை ஞாயிறு காலை உமாபதிசிவாசாரியார் என்னும் பொருள் பற்றி ஆய்வுச் சொற்பொழிவு நிகழவிருக்கிறது. தமிழ் மொழி, சைவ சித்தாந்தம், வரலாறு, இலக்கியம் ஆகியவற்றிற்குச் சிவாசாரியாரின் பங்ளிப்புப் பற்றிய ஆய்வு நிகழும்.

சித்தாந்த சாத்திரத்தில்ஒன்றாகிய நெஞ்சுவிடு தூது பற்றிய ஆய்வும் சிறப்பிடம் பெறும். ஆதீன முதல்வர் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள் அருளாணையின் வண்ணம் இவ்வாய்வினைச் சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை மேற்கொள்ளுகின்றார்.

## வருடாந்த நகர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அட்டன் ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் கோவில் வருடாந்த நகர் வல உற்சவம் எதிர்வரும் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும். மகாவலி கங்கை உற்பத்தியாகும். இடத்திலிருந்து மேள வாத்தியம் காவடிகள் சகிதம் தீர்த்தம் எடுத்து வந்து உற்சவம் ஆரம்பமாகும் வைபவம் இவ் ஆலயத்தின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

முருகப் பெருமானுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் 1008 சங்காபிஷேகமும், விநாயகப் பெருமானுக்கு 108 வலம்புரிச் சங்காபிஷேகம்9ம் திகதி நடைபெற ஏற்பாடாகியும் உள்ளது. இலங்கையில் வேறு எந்தக் கோவில்களிலும்108 வலம்புரிச் சங்குகளால் அபிஷேகம் நடைபெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மே 10ம் திகதி ஸ்ரீ மாணிக்க விநாயப்பெருமான் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் அட்டன் நகர் ஊர்வலம் வருவார் (152)

## தமிழ்த் தினப் போட்டி

(புங்குடுதீவு)

தீவுப் பகுதிகளுக்கிடையில் வேலணை கோட்டக் கல்வி நிலையம் நடாத்திய தமிழ்த் தினப் போட்டியொன்று வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

அப் போட்டியில் புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாசாலை மாணவர்கள் பங்குபற்றிய, காக்கைவன்னியன் நாடகம் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. (101)

## திருக்கோயில், சம்மாந்துறை மக்கள் வங்கி கிளைகளில் அடகு நகைகள் மீளளிப்பு

(மட்டக்களப்பு)

மக்கள் வங்கியின் சம்மாந்துறை, திருக்கோயில் கிளைகளிலும், கிராமிய வங்கியின் கல்முனை, நிந்தாவூர், சாய்ந்தமருது கிளைகளிலும் அடகு வைக்கப்பட்ட நகைகள்இன்று தொடக்கம் மீளளிப்புச் செய்யப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை, நிந்தாவூர், சாய்ந்தமருது கிராமிய வங்கிகளில் அடகு வைக்கப்பட்ட நகைகள் இன்றும், 7ம், 8ம் திகதிகளிலும் வழங்கப்படும்.

திருக்கோயில் மக்கள்வங்கிக் கிளையில் இம்மாதம் 7ம், 8ம் திகதிகளிலும், சம்மாந்துறை கிளையில் இன்றும், 7ம்' 8ம் திகதிகளிலும் அடகு நகைகள் மீளளிப்புச் செய்யப்படும். [து]

## வீதி திருத்தப்படவில்லை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை வீதி கடந்த பல வருடங்களுக்கு மேலாகத் திருத்தியமைக்கப்படாத நிலையில் உள்ளது.

இந்த நிலையால் அவ் வீதிகளால் மக்கள் இரவு நேரங்களில் நோயாளர்களைக் கொண்டுசெல்ல முடியாமலிருப்பதாகக் கூறப்படுகிறது. (101)

## தாக சாந்தி நிலையம்

[புங்குடுதீவு]

புங்குடுதீவு மடத்துவெளிப் பகுதியில் அமரர் தெய்வானைப்பிள்ளை அம்மையாரின் நினைவாக தாகசாந்தி நிலையமொன்று அமைக்கப்பட்டு வருகிறது.

காலஞ்சென்ற தெய்வானைப் பிள்ளையின் வெளிநாட்டிலிருக்கும் உறவினர்களால் இந்த தாகசாந்தி நிலையம் அமைக்கப்பட்டுவருகின்றது. (61)

## மகோற்சவம்

(பருத்தித்துறை)

அல்வாய் சாமணந்தறை ஆலடி விநாயகராலய வருடாந்த மகோற்சவம் கடந்த 30-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இம் மாதம் 8-ம் திகதி தேர்த் திருவிழாவும் 9-ம் திகதி சித்திராபௌர்ணமித் தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

ஒரு பாடசாலை மாணவரின்

# விடைத்தாள் மாற்றுப் பாடசாலை ஆசிரியரினால் மதிப்பீடு செய்யப்படும்

(நாவற்குழி)

''ஒரு பாடசாலை மாணவர்களின் விடைத்தாள்கள் வேறொரு பாடசாலைஆசிரியர்களினால் மதிப்பீடு செய்யப்படும். இவ்வாறான விடைத்தாள்களுக்கு புள்ளிகள் வழங்குவதற்கான புதிய முறை அறிமுகப்படுத்தப்படும்'' என்று யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள் சுற்று நிருபத்தில் தெரிவித்தார்.

''எமது மாவட்டத்தில் மே மாதம் முதலாம் திகதியிலிருந்து சகல கடிதத் தொடர்புகளும், கோவைக் குறிப்புகளும், வித‌ப்புரைகளும், காசோலைகளும் தமிழில் எழுதப்படல் வேண்டும். மதிய போசனத்தை அறிவித்தல் இன்றி அதிபர்கள் நிறுத்தக்கூடாது நிறுத்துவதாயின் கல்விப்பணிப்பாளரின் முன் அனுமதி பெறவேண்டும். மதிய போசனத்தைச் சரிவர நடாத்துவதற்கு ஆசிரியர்கள் கண்காணிப்புச் செய்யவேண்டும். ஆனால் ஆசிரியர்களோ, மாணவர்களோ உணவு தயாரிப்பதில் ஈடுபடக்கூடாது.

மாதத்தில் ஒரு நாளைக்கு அல்லது இரு நாளைக்கு பெற்றோர் தினமாக அமைத்து அதில் பெற்றோரின் செயற்பாடுகளை பெற்றோர்களுக்கு உணர்த்த வேண்டும். அதன் மூலம் மாணவர்களின் குறை நிறைகளை பெற்றோர்கள் அறியக் கூடியதாக இருக்கும். பெற்றோர் தினமாக கொண்டாடும் நாளை கல்விப்பணிப்பாளருக்கும் ஏனைய கல்வியதிகாரிகளுக்கும் அறிவிக்க வேண்டும் என்றும் அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (107)

# இன்று நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக் 'அப்போதிக் கரிஸ்' வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட விளையாட்டுக்கழகங்களிடையே, நடாத்திவரும் உதைபந்தாட்ட லீக் போட்டியில், இன்றைய ஆட்டத்தில் 'பி' பிரிவில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்லைப்பிட்டி சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம் மோதும்.

'ஏ' பிரிவு ஆட்டத்தில், நாவாந்துறை சென். மேரிஸ் கழகத்துக்கும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் இன்று நடைபெறவிருந்த ஆட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். உதைபந்தாட்ட லீக, போட்டிக் குழுக்காரியதரிசி தெரிவித்தார். (வி)

# கடற்றொழிலாளர்களுக்கு படகு வழங்குவதில் தாமதம்

(மன்னார்)

நோர்வே அரசின் உதவியுடன் மன்னார் துயர் துடைப்புச் சங்கம், வன்செயல்களினால் மன்னாரில் பாதிப்புற்ற கடற்றொழிலாளர்களுக்கு வழங்கும் மீன்பிடிப்படகில் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது. ஏறக்குறைய ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வலைகள், இயந்திரப்படகு வழங்கும் பட்சத்தில் இவர்கள் ஆரம்பத்தில் 7500/-வும் மாதா மாதம் 2000/- ரூபாவும் தவணைப் பணம் செலுத்தவேண்டும்,

ஆரம்பத்தில் இப்படகு வழங்கப்பட்டவர்கள் இந்த தவணைப் பணத்தை செலுத்தாது பெற்ற பொருட்களை தவறாகப் பாவித்தமையால் தொடர்ந்து கடற்றொழிலாளர்களுக்கு இந்த திட்டத்தை அமுல்படுத்த சங்கம் தயக்கம் தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக பேசாலையில் கடற்றொழிலாளர்கள் மத்தியில் இச்சங்கம் இதன் விபரங்களை தெளிவாக எடுத்துக்கூறி இத்திட்டம் பயன்பட அனைவருக்கும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் எந்த நோக்கத்துக்காக இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டுமென வலியுறுத்திக் கூறினார்கள். இக் கூட்டத்துக்கு மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் தலைவரும், பேசாலை பங்குத் தந்தையுமான வண பிதா ஜெ. பி. தேவராசா தலைமை வகித்தார். இக் கூட்டத்தில் அரச அதிபர், திரு. ஏ. சி. செபநாயகம், உயர்தர அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# இப்படியும் நடக்கிறது

அது ஒரு 'பிஸி'யான அரச அலுவலகம்:

பிரயாணச் சீட்டுகளை வாங்குவதற்கு 'கவுண்டரி'ல் பணம் கொடுத்தால் மிகுதிப்பணம் அதாவது சில்லறைகள் கிடைப்பது 'கொஞ்சம்' கஷ்டமாகத் தானிருக்கும்.

சில சமயங்களில், மணிச்சத்தம் கேட்க முன்னரே (சரியான நேரம் வந்ததும்) ரயில் புறப்பட்டுவிடும்.

பயணிகளின் பெரிய பொதிகளைக் கண்டால் அங்குள்ள வாசலில் நிற்கும் சிலருக்கு 'அலர்ஜி' போலும்! உள்ளே போகும் போதும் சரி; வெளியே வரும் போதும்சரி; சாட்டுப்போக்குச் சொல்லி அப்பொதிகளை கொண்டு செல்லமுடியாது என்றும், சோதனையிடப் படவேண்டும் என்றும் வற்புறுத்துவார்கள்! கைகள் 'பரிமாறி'யதும் சிரித்துக் கொண்டே பொதிகளை அனுமதிக்கின்றார்கள்.

நீண்ட 'கியூ'. உங்களுக்கோ விரைவில் பயணச்சீட்டைப் பெற வேண்டும் என்று ஆர்வம். உங்கள் பரிதாபம் கண்டு வருவார்கள் 'அவர்கள்'. பணத்தைக் கொடுத்ததும் சீட்டும் விரைவாக வந்து விடும். அப்புறம்? தலையைச் சொறிந்து கொண்டு கையை நீட்டுவார்கள். சில சந்தர்ப்பங்களில் 'அவர்கள்' சீட்டுப் பணத்துடன் தலைமறைவாகி விடுவதும் உண்டு!

இதுதான் கொழும்பு கோட்டை ரயில் நிலையம்!

'ஊடுருவு'

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சீரணி அருள் மிகு நாகம்மாள் ஆலய கொடியேற்று விழா கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் விழாக்கள் நடைபெறும். எதிர்வரும் புதன்கிழமை ரதோற்சவமும் அதனைத்தொடர்து தீர்த்தத திருவிழாவும் நடைபெறும். பக்தர்களின் வசதி கருதி போக்குவரத்து வசதிகளும் அன்னதான வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கொடியேற்று விழாவன்று கவிஞர் அம்பிகைதாசனினால் இயற்றப்பட்ட 'சீரணி அந்தாதிநூல்' வெளியிடப்பட்டது பண்டிதை பொன். பாக்கியம் பண்டிதர் ந. கணபதிப்பிள்ளை ஆகியோர் ஆய்வுரை வழங்கினார்கள் தனிப்பெருமை வாய்ந்த சீரணி நாகம்மாளின திருவருளைப்பெற்றுய்யும் வண்ணம் சீரணி அந்தாதிப் பாடல்கள் அமைந்துள்ளன.

வடமராட்சி

# பொலிஸ் நிலையங்களில் புகார் இல்லை

[வடமராட்சி]

வடமராட்சி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்கள் இயங்கத் தொடங்கிய போதும், மக்கள் இதுவரை எந்த முறைப்பாடுகளும் செய்யவில்லை என மேற்படி பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் புலிகளின் நிர்வாகம் திறம்பட இயங்குவதற்கு மக்களின் பரிபூரண ஒத்துழைப்புகள் கிடைத்துவருவதுடன் மக்கள் தேவையற்ற பிரச்சனைகளையும் குறைத்துவருவது குறிப்பிடத்தக்கது. (51)

# யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகள்

(நாவற்குழி)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இம்மாதம் 16ம் 17ம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற விருக்கின்றன.

இதற்கான ஏற்பாடுகளை யாழ், மாவட்ட உடற்கல்வி கல்வியதிகாரி திரு. த. அருணகிரிராஜா மேற்கொண்டுள்ளார். (107)

## தமிழறிஞர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் பற்றினையும் தெளிவாக்கி உற்சாகத்துடன் செயல்படத் தூண்டுகிறது என்றும் கூறினார்.

''கடல் கடந்த நிலையில் வாழும் தமிழ்மக்கள் அவரது மணிவிழா நிகழ்வுகளுக்கு காட்டியஆதரவு மேலும் பெருமை கொள்ளச் செய்கின்றது. சகலரது ஆசிகளுடன் விழா எதிர்வரும் ஜூன் மாதம், யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

# "ஆலய வழிபாட்டின்மூலம் எதிர்கால சமுதாயம் உயர்வடையும்"

(மட்டுவில்)

ஆலய வழிபாட்டின் மூலமே எமது எதிர்கால சமுதாயம் உயர்வடைவதுடன் வாழ்க்கையிலே எழுச்சியையும் பெற முடியும் என்று சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் கல்வயல் பெருங்குளம் அருள்மிகு அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் உரையாற்றும்போது கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது: ''எதிர்காலப் பிரசைகளாக விளங்கப்போகும் எமது இளைஞர்கள் மத்தியில் மதநம்பிக்கையும் ஆலய வழிபாடும் ஆன்மீக வளர்ச்சியும் அவசியம்.

இன்று எமது மத்தியிலே பிறமத ஊடுருவல்கள் எமது மதக்கோட்பாட்டிற்கு எதிரான போதனைகள், மதமாற்றம் செய்தல் போன்ற தாக்கங்கள் ஆங்காங்கே தலைதூக்குவதை எம்மால் காண முடிகிறது. எனவே நாம் சைவம் என்ற புனித மதத்தைச் சேர்ந்தவர்கள். நாம் புனிதர் என்ற திடமான நம்பிக்கை எமது இளைஞர்கள் மத்தியில் வளர வேண்டும்.

''சைவசமயம் என்பது ஒரு புனிதமான சமயம் மனிதன் வாழ்வாங்கு வாழ வாழ்க்கைக்குவேண்டிய அடிப்படைத் தத்துவங்களை வகுத்துதந்துள்ளது, தத்துவங்கள் உணவிலிருந்து, உடை, உறைவிடம், சுகாதாரம், பாவனைப் பொருட்கள் அணிகலன்கள் அனைத்துக்கும் இன்றைய நவீன விஞ்ஞான உலகிலும் கூட முன்நின்று நவீன நாகரிகத்திற்கும் முன்னோடியாக உள்ளது.

''இன்று எமது சமய இலக்கியங்களும், நாகரிகப்பண்பாடு கலை, கலாச்சாரப் பெருமைகள் ஓரளவுக்கு அருகிவரும் துர்ப்பாக்கியநிலையையும் நாம் ஆங்காங்கே காணக்கூடியதாகவும் இருக்கிறது. இதற்கு பிற நாடுகளின் நாகரிகக் கண்ணோட்டம் ஒருகாரணமாக இருக்கலாம். (82)

# தெமட்டக்கொடை இரட்டைக் கொலை

(கொழும்பு)

தெமட்டக்கொடை இரட்டைக் கொலைச் சம்பவத்தின் போது, மூன்று லட்சம் ரூபா கொள்ளை யடிக்கப்பட்டதா?

கனடாவிலிருந்து அண்மையில் இலங்கை திரும்பிய சுழிபுரத்தைச் சேர்ந்த தம்பதிகள் தெமட்டக்கொடையில்கடந்த திங்கட்கிழமை படுகொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

கொலைச்சம்பவம் நிகழ்ந்த போது, இத்தம்பதிகள் வசமிருந்த மூன்றுலட்சம் ரூபா ரொக்கப்பணமும் கொள்ளையர்களினால் களவாடப்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கொலையுண்ட தம்பதிகள், சுமார் நூறு தமிழ் இளைஞர்களை அணமைக் காலத்தில் போலி 'விசா'வில் கனடாவுக்கு அனுப்பியிருப்பதாகவும் இதற்காக பெருந்தொகைப் பணத்தை இவர்கள்வசூலித்ததாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவநதுள்ளது.

# சமயப்போட்டி பரீட்சை

(உடுவில்)

இணுவில், தாவடி, உடுவில் போன்ற கிராமங்களை சேர்ந்த பிள்ளைகளின் சமயக்கல்வி மேம்பாட்டுக்காகவும், சமய வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடனும் இணுவில் முப்பெரும் இலக்கிய மன்றத்தினர் சமயபாட போட்டிப் பரீட்சையொன்றினை நடாத்தியுள்ளனர்.

இப்போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பரிசுகள், சான்றிதழ்கள் இணுவில் பரராச சேகரப்பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழாவிலன்று கோவிலில் வைத்து வழங்கப்பட இருப்பதாக முப்பெரும் இலக்கியமன்ற அமைப்பாளர் திரு. சிவ. தணிகாசலம் தெரிவித்துள்ளார் (109)

# சென். அன்ரனிஸ் கழகம் முதலாம் இடம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன், மாந்தை மேற்கு அடம்பன் கோட்ட உதவி ஆணையர் பிரிவின் விளையாட்டுக் கழகங்களிடையே மெய்வல்லுநர் போட்டி, அடம்பன் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

மாந்தை மேற்கு கோட்ட உதவி ஆணையர் திரு. எஸ். எம். ரி. முதலி தலைமையில் நடைபெற்ற இப்போட்டிக்கு மன்னார் கோட்ட ஆணையர் திரு. ஏ. சி. செபநாயகம் பிரதமஅதிதியாக கலந்துகொண்டார்.

கௌரவ விருந்தினராக மன்னார் மாவட்ட விடுதலைப் புலிகள் இராணுவத் தளபதி திரு. சுபன் கலந்துகொண்டார்.

விசேட விருந்தினர்களாக மன்னார் மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு.எஸ். சுரேஷ், அடம்பன் பிரதேச விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. பி. பாரதி, அடம்பன் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. ஜி. ஜேக்கப் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

மெய்வல்லுநர் போட்டியை மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எம். ஜீவரெட்ணமும், அடம்பன் விளையாட்டு உத்தியோகத்தர் திரு. ஜீமன் மரியதாஸும் நெறிப்படுத்தி நடத்தினார்கள்.

இப்போட்டியில் நெடுங்கண்டல் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 98 புள்ளிகளைப் பெற்று, முதலாவது இடத்தையும், இத்திக்கண்டல் டிலாசால் விளையாட்டுக்கழகம் 84 புள்ளிகளைப் பெற்று 2வது இடத்தையும் பெற்றது. (வி)

# சகோதரர்களுக்கு சம்பியன் கிண்ணம்

(புத்தளம்)

குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்திய விளையாட்டுப் போட்டியில் ஸ்ரீகரன் ஸ்ரீகாந்தன், ஸ்ரீதரன் ஸ்ரீகாந்தன் ஆகிய சகோதரர்கள் சம்பியன் கேடயத்தைப் பெற்று சாதனை புரிந்துள்ளார்கள்.

ஸ்ரீதரன் 400 மீற்றர் ஓட்டம், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், வேகநடைப் போட்டி ஆகிய நான்கு நிகழ்ச்சிகளில் முதலாமிடத்தையும், ஸ்ரீகரன் கீழ்ப்பிரிவில் 100 மீற்றர் ஓட்டம், உயரம் பாய்தல், நீளம் பாய்தல் ஆகிய நிகழ்ச்சிகளில் முதலாமிடங்களையும் பெற்றுள்ளார்கள்.

## மாணவர், ஆசிரியர்கள்!

# தொகைக்கேற்பகல்விப்பகுதி

# ஆளணிகள் வளரவில்லை

## -யாழ். கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் எண்ணிக்கை வளர்ச்சிக்கு ஏற்ப யாழ். மாவட்ட கல்வித்திணைக்களத்தின் ஆளணிகள்வளரவில்லை.

இவ்வாறு யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு, இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். மாவட்டத்தின் கல்வித்திணைக்களத்துக்கு போதியளவு ஆளணிகளை 1990ம் ஆண்டு தருமாறு தான் வடக்கு கிழக்கு மாகாணசபை செயலாளரைக் கேட்கவுள்ளதாகவும் கூறினர்.

1958ம் ஆண்டு திறைசேரியினல் அங்கிகரிக்கப்பட்ட ஆளணிகளே இன்றும் வடபகுதி கல்வித்திணைக்களங்களில் காணப்படுகின்றன. என்றும் கடந்த 32 வருடங்களாக மாணவர்கள் ஆசிரியர்கள் தொகையில் மாற்றங்கள் ஏற்பட்டும் யாழ். கல்வித்திணைக்கள ஆளணியில் மாற்றம் ஏற்படவில்லை. என்றும் கூறினர்.

அவர் மேலும்கூறியதாவது.

ஆசிரியர்களுடைய சுயவிபரக் கோவைகள் அந்தந்த கோட்டக் கல்வி அலுவலகங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. சுய விபரக் கோவையிலுள்ள ஆவணங்களை யாரும் வெளியே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

வெளிமாவட்டத்திலிருந்து மாற்றலாகி வந்த ஆசிரியர்களுடைய சுயவிபரக்கோவையில் குறைபாடுகள் அதாவது சில ஆவணங்கள் இல்லாத காரணத்தால் நிலுவைகள், சம்பள ஏற்றங்கள் உடனே வழங்கமுடியாத நிலையில் இருக்கிறது.

வெகுவிரைவில் சாவகச்சேரியில் கல்விக்கோட்டம் ஒன்று திறக்கப்படவுள்ளது என்றார். (153)

### 55 வயதுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளது.

சேவைக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படும் அரசாங்க ஊழியர்களைத்தவிர வேறு எந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் சேவை நீடிப்பு கோரி சிபார்சுசெய்யக்கூடாதெனவும் அரசாங்கத் திணைக்களத்தலைவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத் திணைக்களங்களில் இளைஞர்களுக்கு கூடுதல் தொழில்வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள இப்புதிய நடவடிக்கை நாட்டிற்கு மிக நன்மை பயக்கக்கூடிய தென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

### வாகனப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

குறிப்பாக, கராஜ் உரிமையாளர்கள் பழுதடைந்த வாகனங்களை தமது கராஜ் முன்பாக வீதியோரத்தில் நிறுத்தி அவற்றைத் திருத்துவதனலும், மரக்காலை உரிமையாளர்கள் சிலர் பெரிய மரங்களை வீதியோரத்தில் போடுவதனலும், பொது மக்கள் சிலர் தமது கட்டிடப் பொருட்களை வீதியோரத்தில்பறித்து நீண்டகாலம் தேங்கியிருக்க வைப்பதனுல் வீதிப் போக்குவரத்து சீர்குலைய ஏதுவாகின்றது.

எனவே. மாநகரப் பகுதியில் வாகனப் போக்குவரத்து தங்கு தடையின்றி நடைபெறவும், வீதி விபத்துக்களை அறவே ஒழிக்கவும் மேற்குறிப்பிட்டவர்கள் வாகனங்களை வீதியோரத்தில் நிறுத்தாமல், வீதியோரத்தில் வைத்து திருத்த வேலைகள் செய்யாமலும் மரங்களை வீதியோரத்தில் போடாமலும், கட்டிடப் பொருட்களை வீதியோரங்களில் தேக்கி வைக்காமலும் எம்முடன் ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வேண்டுகோளை உடன் நடைமுறைப்படுத்தத்தவறின் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

### இன்று

(உடுவில்)

யாழ்ப்பாணம் பாரதி கான சபாவினரின் பிரதிமாத அரங்கிசை நிகழ்ச்சி இன்று மாலை வயலின் வித்துவான் எஸ். சர்வேஸ்வரசர்மாவின் இல்லத்தில் நடைபெறுகின்றது.

வளரும் கலைஞர் இசை அரங்கு நிகழ்ச்சியில் செல்வி ஷர்மிழி பொன்னுத்துரையின இன்னிசை இன்று நடைபெறும். அத்துடன் திருமதி நாகேஸ்வரி பரமானந்தாவின இசைக்கச்சேரியும் நடைபெறும். (109)

0 0

(உடுவில்)

காரைநகர் ஊரணிக் கிராமத்தில் இன்றும், நாளையும் உண்டியல்கள் வழங்கப்பட்டு கணக்குகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுன்னுகம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு. எஸ். சிவராசா தெரிவித்துள்ளார். (109)

### சேவை தொடர்பான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கோரியுள்ளார். ஆசிரியர்கள் விரும்பினுல் அப்படிவங்களை நிரப்பாது கல்விப் பணிமனைக்கு திருப்பி அனுப்பலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக கல்வி அமைச்சர் அத்துலத் முதலி, கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி புலேந்திரன் ஆகியோருக்கும், வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பியுள்ள மகஜரில், தமிழ் ஆசிரியர்களுக்கு தமிழில் மேற்படி படிவங்கள் கிடைக்க ஆவன செய்யுமாறும், தமிழ் ஆசிரியர்கள் ஆங்கிலப் படிவங்களை நிரப்பி அனுப்பமாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### வன்செயலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை, இந்திய இராணுவ நடவடிக்கை, இனக்கலவரம் போன்ற சூழ்நிலைகளில் அகப்பட்டு மரணமடைந்த ஆசிரியர் குடும்பத்தினர், 55 வயது வரை வாழ்ந்து கொண்டிருந்தால் வழங்கப்படவேண்டிய சம்பளத்தை மாதாந்தம்பெறுவார்கள் எனவும், அத்துடன் விதவைகள் ஓய்வூதியத்தையும் பெறுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் மனைவிமார் அல்லது பிள்ளைகள் மே 15-ம் திகதிக்குமுன், அவர்களுடைய சம்பளத்தைப் பெறலாமென்ற கடிதம் கைகளில் கிடைக்கவில்லையாயின் சங்கத்திடம் புகார் செய்யுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.


## எமது நேற்றைய புதிய வெளியீடுகள்!

1. கார்த்திக் ★ ரேவதி ★ ஜனகராஜ்
**இதய தாமரை**
[ஒறிஜினல்]

2. அர்ஜுன் ★ வெண்ணிலா ★ வை. விஜயா
**"பட்டிக்காட்டு வீரன்"**

3. ஜெமினி ★ சாவித்திரி ★ தங்கவேலு
**குணசுந்தரி**
[ஒறிஜினல்[

4. A. V. M. ராஜன் ★ பிரமீளா
**புகுந்தவீடு**
[ஒறிஜினல்]

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

(ஏ-735)


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

R gistered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

# உலகிலேயே மிகப்பெரிய முத்து ஏலத்தில்

(லொஸ் ஏன்ஜெலஸ்)

உலகிலேயே மிகப்பெரிய முத்து பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், ஏலத்துக்கு விடப்பட்டுள்ளது. 2600 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டு எடுக்கப்பட்ட இம்முத்துவின் பெறுமதி நான்கு கோடி அமெரிக்க டொலராகும்.

லொஸ் ஏன்ஜெலஸ் நகரத்துக்கு அருகே உள்ள பட்டணத்தில் ஏலத்துக்கு விடப்பட்டபோது, பல நூற்றுக்கணக்கான கோடீஸ்வரர்கள் இதனை வாங்கப் போட்டியிட்டனர்.

6342 கிராம் எடையுள்ள இம்முத்து பற்றி ஒரு வரலாறு உண்டு. 2600 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டு எடுக்கப்பட்ட இம்முத்துவின் சொந்தக்காரர் சீனத் தத்துவஞானி லாவோ திசு என்பவராவார். இவருடைய பெயர் கொண்டே இன்றும் இம்முத்து அழைக்கப்படுகிறது.

சீனுவிலிருந்து பின்னர் பிலிப்பைன்ஸுக்கு இம்முத்து அனுப்பி வைக்கப்பட்டதாம். ஒருதடவை இது காணுமல் போய்விட்டதாக கூறப்பட்டபோதும், பின்னர் அது இந்த நூற்றுண்டிலே மீட்கப்பட்டு, ஏலத்துக்கு விடப்பட்டுள்ளது. (அ)

### நிவாரண கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையில் ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு கீழ்குறிப்பிட்ட கிராமசேவகர் பிரிவுகளுக்கு நாளை ஞாயிற்றுக் கிழமை வழங்கப்படும்.

கரணவாய் மேற்கு, கரணவாய் வடக்கு, கரணவாய் தெற்கு, கரணவாய் கிழக்கு கரணவாய் மத்தி, துன்னலை மேற்கு, துன்னலை தெற்கு, துன்னலை கிழக்கு, கப்புது.

### ஷார்ஜா கிரிக்கெட்டில் பாகிஸ்தான் சாம்பியன்

(ஷார்ஜா)

ஷார்ஜாவில் நடைபெற்ற 'அஸ்ரலேசியா' வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்று, வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

அவுஸ்திரேலியாவுடன் நேற்று இடம் பெற்ற இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்தது.

### யாழ். மத்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரால் ஓவியக்கண்காட்சி நடத்தப்படும்.

இப்போட்டியில் பங்குபற்றி தெரிவு செய்யப்படும் ஓவியங்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலும் தொழிலாளர் தினமாகிய மேதினத்தில் பங்கு பற்றி வெற்றியீட்டிய ஊர்திகளுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பரிசு பெற்றோர் விபரம் வருமாறு;

ஊர்திகளுக்கான பரிசுபெறுபவர்கள்.

1ம் இடம் வலிகாமம் (Solt) மாணவர் அவை.

2ம் இடம்: ஊர்காவற்றுறை (மாலைக்காட்சி)

3ம் இடம் சுன்னுகம் ப.நோ கூ. சங்கம்.

4ம் இடம் நாவாந்துறை கடற்றொழிலாளர்சங்கம்.

5ம் இடம் துறையூர் கடற்றொழிலாளர் சங்கம்.

சான்றிதழ் பெறுவோர்

6ம்இடம கோணுவளை செல்வநாயபுரம். கிராம முன்னேற்றச் சங்கம்.

7ம் இடம் அச்சுவேலி தெங்கு பனம்பொருள் கூ. சங்கம்.

8ம் இடம வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கம யாழ்ப்பாணம்.

9ம் இடம் பாஷையூர் மக்கள்

10ம் இடம் உரும்பிராய் மக்கள்.

### அ. தி. மு. க. வெளியேற்றம்

(சென்னை)

அனைத்துஇந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் நேற்று இரண்டாவது நாளாக சட்டசபைப் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

### யாழ். மாநகர

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் சோலைவரி பணம் சம்பந்தமாக யாழ். மாநகராட்சி மன்றத்தின் எல்லைக்குள் உள்ள வரியிறுப்பாளர்களின் பூரண ஒத்துழைப்பு கிடைத்துள்ளது.

கடந்த காலத்தில் பலவகையான பிரச்சனை காரணங்களாலும். சட்டவிரோத மின் பாவனை, மீற்றர் மானியில் கையாடல் ஆகியவற்றினுலும் மாநகராட்சி மன்றத்திற்கு 30 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பொழுது கூட மாதாந்தம் சராசரி 5 லட்சம் ரூபா மாநகராட்சி மன்றம் இழந்து வருகிறது. சட்டவிரோத மின்சார பாவனை, மீற்றர் மானி கையாடல் ஆகியவற்றைத் தடுப்பதற்கு விசேட தடுப்புக் குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மின்பொறியிலாளர் தலைமையில் இயங்கும் குழு மாநகர எல்லைக்குள் பரவலாக திடீர் பரிசோதனைகளில் ஈடுபடும். மீற்றர்மானி கையாடல் கண்டுபிடிக்கப்பட்டால் 2000 ரூபா அபராதம் உடனே விதிக்கப்படும். அத்துடன் பாவித்த மின்சாரத்துக்கும் சாராசரி மதிப்பீட்டின் அடிப்படையில் பணமும் அறவிடப்படும்.

1990-ம் ஆண்டு சைக்கிள் லைசென்சுகளை விரைவில் பெற்றுக் கொள்ளுமாறு சைக்கிள் உரிமையாளரை கேட்டுக் கொள்ளுகிறேன். சைக்கிள் லைசென்சு தகடுகள் எல்லாம் போதியளவு மன்றத்தின் கையிருப்பில் உள்ளது. நல்லூர் நூலகத்தில் இம்மாதம 15-ம் திகதி முதல் பத்திரிகைகள் வாசிக்கும் பகுதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

லொறிகள் தரிப்பிடம் ஸ்ரான்லி வீதியில் அமைக்கப்படவுள்ளது' என்றார். (153)

### மனித

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விப்பு வருமென்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனுல் உதவி பற்றி எந்த அறிவிப்பும் வரவில்லை கண்டியிலுள்ள கலாசார கேந்திரங்களை பாதுகாப்பதற்காக 2லட்சத்து 30 ஆயிரம் டொலர் உதவி மட்டுமே அறிவிக்கப்பட்டது என்று பி.பி.ஸி. தெரிவித்தது.